# ஆசிரியர்

*– ஆசி இருந்தால் அனைவரும் அப்துல் கலாமே –*

**"என் ரோல்மாடல் என் ஆசிரியர்கள்தான். அவர்கள் இன்றி இந்தக் கலாம் இல்லை. எல்லா மாணவர்களுக்கும் ஆசிரியர்கள்தான் அவர்கள் ரோல்மாடல்களாக இருக்க வேண்டும். மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் முதல் 17 வருடங்களை அதாவது 25,000 மணி நேரங்களை ஆசிரியரிடம்தான் செலவழிக்கிறார்கள். பிறகு ஆசிரியர் அன்றி வேறு யார் ரோல்மாடலாக இருக்கமுடியும்?"**

*– கலாம்*

யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும்
நகல் எடுத்துக் கொள்ளலாம்,
வியாபார நோக்கு இல்லாதவரையில்.
நல்ல விஷயங்கள் பரவட்டுமே !

புத்தகம் அச்சிடுபவர் :
**ராஜ்குமார் பிரிண்டர்ஸ்**
புத்தூர், திருச்சிராப்பள்ளி-620 017.
செல் : 98651 13112

# ஆசிரியர்

திருச்சிராப்பள்ளி – 1
11.12.15

## முன்னுரை

நம்முடைய சங்க வளாகத்தில் "வாரம் ஒரு நீதிக்கதை" என்ற தலைப்பில் ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு தலைப்புகளில் கோயிலுக்கு வரும் அன்பர்கள் படித்துப் பயன்பெறும் வகையில் ஏதாவது ஒரு கதையோ, கட்டுரையோ, கவிதையோ, அல்லது அவர்களுக்கு உபயோகப்படும்படியான நிகழ்ச்சி பற்றியோ எழுதுவது என்பது பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஒரு பழக்கமாகும்.

அப்படிப்பட்ட கருத்துக்களில் " ஆசிரியர்" பற்றி எழுதியவைகளை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களும் படித்து ஆசிரியர் பெருமையினை அறிந்து கொண்டனர். ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் முதல் கல்லூரி பேராசிரியர்கள் வரை எல்லோரும் படித்து 'தமது பெருமையை' உணர்ந்து கொண்டனர். ஒவ்வொரு மாணவனின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் தமது பணி எவ்வளவு சக்தி வாய்ந்தது என எண்ணி புளகாங்கிதம் அடைந்த ஆசிரியர்கள் பலர். குருவின் மகிமை என்ன என்பதை உணர்ந்து கொண்ட மாணவர்கள் பலர்.

மறைந்த முன்னாள் பாரத குடியரசுத்தலைவர் திரு. அப்துல் கலாம் அவர்கள் மறைவுக்குப் பின் அவர் பற்றியச் செய்திகள் பல "ஆசிரியர்கள் எவ்விதத்தில் அவருடைய முன்னேற்றத்திற்கு அறிவாற்றலுக்கம் உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் விளங்கினர்" என்பதை பறை சாற்றியது. மாணவர்களுக்கு அவருடைய குருபக்தி ஒரு வழிகாட்டியாய் விளங்கியது.

ஆசிரியரின் பெருமைபற்றிய நாம் எழுதியவற்றின் கதைகளின் தொகுப்பை ஒரு சிறிய புத்தகமாக வெளியிட்டால், அது மாணவச் சமுதாயத்திற்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் மிகவும் உபயோகமாக இருக்குமே என்று பலர் ஆதங்கப்பட்டதன் விளைவே இந்த நூல்.

இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகள் நம்மால் மட்டுமே எழுதப்பட்டவை அன்று. கதை ஆசிரியர்கள் பலரால் எழுதப்பட்டு பல்வேறு இதழ்களில் வெளியானவைதான் இவை. கட்டுரைகள் மிக நெகிழ்வாக உள்ளன, நன்றாக உள்ளன, உபயோகமாக உள்ளன என்று யாராவது நினைத்தால் அப்பெருமைகள் அனைத்தும் அவற்றின் ஆசிரியர்களையும் பத்திரிக்கைகளையுமே சேரும். நாம் ஒரு கிரியா ஊக்கி மட்டுமே!

இங்கு தொகுக்கப்பட்டவைகளை படித்துவிட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் ஒரு நல்ல பாடமாக எடுத்துக்கொள்ளவோ அல்லது தன்னுடைய கடமையை மிகச் சிறப்பாக செய்தாலோ இத்தொகுப்பினை வெளியிட்டதன் தூய நோக்கம் நிறைபெறுகின்றது.

வியாபார நோக்கில் யாம் இதை வெளியிடவில்லை. இத்தொகுப்பை யார் வேண்டுமானாலும் நகல் எடுத்துக்கொள்ளலாம். நல்ல கருத்துக்கள் எல்லோருக்கும் போய்ச் சேர்ந்தால் அதைவிட ஒரு படைப்பாளிக்கு வேறு மகிழ்ச்சி என்ன இருந்துவிட முடியும்.

*" அறிவோம் நன்றாக*
*குரு வாழ்க குருவே துணை "*

தொகுப்பு :

**B. கனக சபாபதி**
**94430 43426**
bkvaluer@gmail.com


**S. பாலகுமாரன்**
**89034 63858**

# பொருளடக்கம்


| எண். | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 1. | கலாமிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வி | 1 |
| 2. | நல்ல குணங்களைக் காண்பித்த டீச்சர் | 1 |
| 3. | பூக்களை மலர்வித்த ஆசிரியை | 3 |
| 4. | நல்லாசிரியர் விருதைவிட உயர்ந்த விருது | 5 |
| 5. | தலைமை ஆசிரியருக்கு.......... லிங்கன் எழுதிய கடிதம் | 7 |
| 6. | அட்சய பாத்திரம் | 9 |
| 7. | ஆசிரியர்களுக்கான பத்து உறுதிமொழிகள் | 11 |
| 8. | என்னைச் செதுக்கிய ஆசிரியர் | 12 |
| 9. | ஆசிரியரின் பெயரால் ஒரு பள்ளிக்கூடம் | 13 |
| 10. | ஒரு ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும்? | 14 |
| 11. | என் கனவு ஆசிரியர் | 15 |
| 12. | TEACHER | 16 |
| 13. | ஆசிரியர் பாரபட்சமில்லாதவர் ஒரு சூரியனைப் போல | 16 |
| 14. | ஆண்டவா, என்னை நல்லாசிரியனாக்கு! | 17 |
| 15. | ஆஹா ஆசிரியர் | 18 |
| 16. | அறிவுள்ள பிள்ளைகளை உருவாக்குதற்குரிய சில விதிமுறைகள் | 19 |
| 17. | உலகம் ஒரு மிகப்பெரிய வகுப்பறை | 21 |
| 18. | அரும்பில் ஓர் அமிலவினை! | 25 |
| 19. | காரணம் யார்? | 30 |
| 20. | அன்பு | 30 |
| 21. | குரு ப்ரீதி | 31 |
| 22. | ஆசிரியர் பணியே அறப்பணி | 32 |
| 23. | ஆசிரியரும் நம் மீது உரிமையுள்ளவரே | 33 |
| 24. | இதற்குத்தான் காத்திருந்தாயா வைபவி ? | 34 |
| 25. | அந்த ஆசிரியர் செய்த அற்புதம் | 38 |
| 26. | ஆசிரியரின் விளையாட்டும் மாணவரின் விளையாட்டும் | 39 |
| 27. | Difference between a Teacher and Guru | 40 |
| 28. | ஒரு வார்த்தை | 42 |
| 29. | SRK, an outstanding teacher | 43 |


**ஆசிரியர் பணி ஒரு அறப்பணி**

* * *



# 1. கலாமிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வி

எதிர்காலத்தில் மக்கள் உங்களை எப்படி நினைவு கூர வேண்டும் என நினைக்கின்றீர்கள் ?

ஜனாதிபதியாகவா?

விஞ்ஞானியாகவா?

எழுத்தாளராகவா?

ஏவுகனை மனிதராகவா?

இந்தியா 2020 - 30 கோடி பேரின் குறிக்கோள் என்றெல்லாம் லட்சியக் கனவுகளை வழங்கியவராகவா?

அதற்கு கலாம்,

" **ஒரு ஆசிரியராக நான் நினைவு கூரப்படவேண்டும்** " **என்றார்**.

# 2. நல்ல குணங்களைக் காண்பித்த டீச்சர்

ஒரு டீச்சர் தன் வகுப்பு மாணவர்களிடம் வெற்றுத் தாள்களைக் கொடுத்து ஒவ்வொருவரையும் வகுப்பில் உள்ள மற்ற மாணவர்கள் அனைவரின் பெயரை அதில் எழுதச் சொன்னார்.

ஒரு பெயருக்கும், அடுத்த பெயருக்கும் இடையே சிறிது இடைவெளியுடன்!

மாணவர்கள் எழுதி முடித்தவுடன், டீச்சர் சொல்கிறார்.

"ஒவ்வொரு பெயருக்கும் எதிரே, அவர்களிடம் நீங்கள் காணும் – உங்களுக்கு பிடித்த நல்ல விஷயம் ஒன்றைப்பற்றி எழுதுங்கள்."

மாணவர்கள் அவரவர் இடத்திற்கு சென்று அமர்ந்து படிக்கிறார்கள்.

10 நிமிடங்கள் – வகுப்பறையே சந்தோஷக் கடலில் மிதக்கிறது.

"நான் இவ்வளவு சிறப்பானவனா…? என்னைப் பற்றி மற்றவர்கள் இவ்வளவு நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார்களா?"

அத்தனை மாணவர்களும் ஆனந்தத்தில் திளைக்கிறார்கள்!

அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குணாதிசயங்களை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள்.

தன்னைப் பற்றி உயர்வாகச் சொன்னதற்காக ஒவ்வொரு மாணவனுக்கும், சக மாணவர்கள் மேல் அன்பு அதிகரிக்கிறது.

பல வருடங்கள் கழிகின்றன.

அந்த வகுப்பில் படித்த சரவணன் என்னும் மாணவன் வளர்ந்த பிறகு ராணுவத்தில் சேர்கிறான். பிறகு போர் ஒன்றில் வீர சாகசம் புரிந்து, வீர மரணம் அடைகிறான்.

அவன் உடல் ராணுவ மரியாதையுடன் சொந்த ஊர் கொண்டு வரப்படுகிறது.

இறுதிச் சடங்கில், கலந்து கொள்ள அந்த டீச்சரும் செல்கிறார்.

மிடுக்கான ராணுவ உடையில், நாட்டின் தேசியக்கொடி போர்த்தப்பட்டு, சவப் பெட்டியிலும் கம்பீரத்துடன் காணப்பட்ட அந்த மாணவனைக் கண்டு பெருமிதத்துடன் கண் கலங்குகிறார்.

ஒவ்வொருவராக வரிசையில் வந்து இறுதி மரியாதை செலுத்துகின்றனர். டீச்சர் கடைசியாகச் செல்கிறார். பின்னர், பக்கத்திலேயே நிற்கிறார்.

உடலைத் தாங்கி வந்த ராணுவ சக வீரர்கள் அருகிலேயே நின்றிருந்தனர்.

ஒரு வீரர் கேட்கிறார். "நீங்கள் சரவணனின் 10ஆம் வகுப்பு டீச்சரா?" என்று. டீச்சர் "ஆம்" என்று தலையசைக்கிறார்.

பின்னர் அந்த ராணுவ வீரன் சொல்கிறான் "டீச்சர், எனக்கு உங்களைத் தெரியும். சரவணன் உங்களைப் பற்றி எப்போதும் சொல்லிக் கொண்டே இருப்பான்"

சடங்குகள் முடிந்த பின்னர், சரவணனின் பழைய வகுப்புத் தோழர்கள் அங்கு டீச்சருடன் ஒன்றாக நின்றிருந்தனர்.

அங்கு சரவணனின் தாயும் தந்தையும் வருகின்றனர்.

அந்த சோகத்திலும் தந்தை டீச்சரிடம் கூறுகிறார்.

"டீச்சர், நான் உங்களுக்கு ஒன்றைக் காட்ட வேண்டும். இது சரவணன் போரில் மரணம் அடைந்த போது அவனது பாக்கெட்டிலிருந்து இறுதியாக கண்டெடுக்கப் பட்டது"

அவர் காட்டியது, பெரிய பர்ஸ் ஒன்றில் பத்திரமாக பல முறை மடிக்கப்பட்டு, மடிப்புகள் எல்லாம் டேப் போட்டு ஒட்டப்பட்டு பத்திரமாக பாதுகாக்கப்பட்ட ஒரு தாள்.

ஆமாம் – பல வருடங்களுக்கு முன்னர் அந்த டீச்சர் சரவணனைப் பற்றிய நல்ல குணங்களை வரிசைப்படுத்தி தொகுத்து எழுதிக் கொடுத்திருந்த அதே காகிதம் தான்!

கண்ணீர் பெருக்குடன் சரவணனின் தாய் கூறுகிறார்.

ரொம்ப நன்றி டீச்சர் – உங்கள் கடிதத்தை அவன் உயிரையும் விட மேலாக விரும்பினான்.

இத்தனை வருடங்களும் அதை அவ்வளவு பத்திரமாக பாதுகாத்து வந்தான்.

அவனுக்கு வாழ்க்கையில் மிகுந்த தன்னம்பிக்கையும், பிடிப்பும் ஏற்பட இந்த காகிதம் தான் உதவியது.

டீச்சரும் மற்ற மாணவர்களும் சரவணனை நினைத்து கதறி அழுதனர்.

* * *

# 3. பூக்களை மலர்வித்த ஆசிரியை

அந்த ஆசிரியை பாடங்களை நிறுத்தி நிதானமாய் வாசிப்பதற்குப் பயிற்சி கொடுப்பவர்.

உயிரற்றக் குரலில் சிலர் வாசித்தனர். அவர்கள் வாசிப்பது வகுப்பு முழுக்கக் கேட்கும்வரை, பல முறை வாசிக்கச் சொன்னார். தவறு நேரும்போது, பொறுமையாகத் திருத்தினார்.

ராஜ்குமாரும் கல்பனாவும் வாசிக்கும் போது வேறு மாதிரியான சிக்கல்கள் தோன்றின. ராஜ்குமாருக்குத் திக்குவாய். இதன் காரணமாக வகுப்புகளில் வாசிப்பிலிருந்து சௌகரியமாகத் தப்பித்திருக்கிறான்.

இன்று ஆசிரியை வாசிக்கத் சொன்னதும் தயங்கினான்.

"பரவாயில்லை படி!" என்றார் ஆசிரியை. ராஜ்குமார் திணறித் திணறி வாசித்தான். வகுப்பறையில் சிரிப்பு.

வாசித்து முடித்ததும் அவனிடம் ஓர் அவமான உணர்வு குடி கொண்டிருக்க வேண்டும். ஆசிரியை அதைக் கவனித்தார்.

அடுத்து கல்பனா வாசிக்கும்போது வேறொறு பிரச்சினை. அவளுக்குச் சன்னமான கீச்சுக்குரல். அவள் ஒரு வரி வாசித்ததும் வகுப்பு சிரித்தது. கல்பனாவுக்கு வேர்த்துக் கொட்டியது.

அந்தக் கீச்சுக்குரல் நடுங்க வேற ஆரம்பித்தது. மொத்த வகுப்பறைக்குக் கொண்டாட்டம். கடைசி பெஞ்சிலிருந்த மாணவன் கல்பனாவின் குரலை "மிமிக்ரி" வேறு செய்ய ஆரம்பித்தான்.

சிரிப்புச் சத்தங்கள் மெல்ல தேய்ந்து வகுப்பறை மௌனத்திற்கு வந்ததும் ஆசிரியை கூறினார், "எதையும் மன்னிக்கலாம். இதை மன்னிக்க முடியாது. சகோதரத் திறமைகளைக் கிண்டல் செய்வது சிறு பிள்ளைத்தனம். உங்களைப் பாராட்டி உங்களது திறமைகளை வளர்க்க யார் இருக்கிறார்கள்? ஒருவருமில்லை. கைவிடப்பட்டவர்கள் போல நீங்கள் இருக்கிறீர்கள். இந்த நேரத்தில் நாம் செய்ய வேண்டியது என்ன? நமக்கு நாமே வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒருவரை ஒருவர் பரஸ்பரம் தட்டிக் கொடுத்து வளர்க்க வேண்டும். கிண்டல் செய்யக் கூடாது"

வகுப்பறை அமைதியில் உறைந்தது. இந்த நியாயத்தை வகுப்பறை உணர்ந்தது. தொடர்ந்தார் ஆசிரியை,

"ராஜ்குமார் திக்கினான். உங்கள் சகோதரன் அல்லவா அவன்? அவனுக்கு வாய்ப்புகளைக் கொடுத்து அவனது உற்சாகத்தை வளர்ப்பது இந்த வகுப்பின் கடமையல்லவா? அவனது குறைகளை அவனுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருந்து அவனை ஒடுக்கினால் இது வகுப்பல்ல சிறைதான்."

"நேசமிருந்தால் குறைகள் தெரியாது. இது நேசமற்ற வகுப்பு. அதனால்தான் குறைகளைக் கண்டால் சிரிக்கிறது. கல்பனாவுக்கு கீச்சுக்குரல். ஆனால் அதுவும் அழகான குரல்தான். காந்தி, கலாம் போன்ற தலைவர்களின் குரல்கள் எல்லாம் மென்மையான குரல்தான். கோடிக் கணக்கான மக்கள் அக்குரல்களின் ஆணைக்காகக் காத்துக் கிடந்தார்கள்.

எல்லாக் குரலும் சிம்மக் குரலாக இருந்தால் கேட்கச் சகிக்குமா? குரல்களில் பேதம் வேண்டும். பேதங்களைப் புரிந்துகொள்ள காதுகளும், ரசித்துப் பாராட்ட மனமும் வேண்டும். சரி! ராஜ்குமாருக்கும், கல்பனாவுக்கும் மீண்டும் ஒரு வாய்ப்பு தருவேன். இந்த வகுப்பறை இந்தக் குரல்களை மதிக்கிறதா என்று பார்ப்பேன்! என்றார் ஆசிரியை.

இருவரையும் மீண்டும் வாசிக்கச் சொன்னார். ராஜ்குமார் அதிக தடுமாற்றம் இல்லாமலும், கல்பனா நடுங்காமலும் வாசித்தார்கள்.

எல்லோரும் கை தட்டினர். ஆசிரியை ராஜ்குமார் மற்றும் கல்பனாவின் முகங்களைப் பார்த்தார். அவை மலர்ந்திருந்தன.

ஒரு முகத்தை மலரச் செய்வது அரிய காரியம்! இந்த வகுப்பறை நினைத்தால் எத்தனையோ முகங்களை மலர வைக்கலாம் என்று கூறிய ஆசிரியை, மாணவர்கள் நன்றாக, சிரத்தை எடுத்து வாசிக்கும் போதெல்லாம் மறக்காமல் "குட்" கூறினார்.

"குட்" என்ற சொல்லில் மாணவர்கள் முகத்தில் ஒரு பூவே மலர்வதைக் கவனித்தார் ஆசிரியை. ஆம். **மலரும் முகங்களைப் பார்த்தாலே பரவசம்தானே!**

– **ச. மாடசாமி**

எனக்குரிய இடம் எங்கே?

என்ற புத்தகத்திலிருந்து..

* * *

## ஆசிரியர்

நம்மை விட வளர்ந்து விட்டானே என்று பொறாமைபடாத ஒரே ஜீவன் நம் ஆசிரியர்கள் மட்டும்தான்.

-kayalv@twitter.com

# 4. நல்லாசிரியர் விருதை விட உயர்ந்த விருது

ஒரு நகராட்சிப் பள்ளியில் நடந்த நிகழ்வைப் பாருங்கள்.

அந்த முதல் வகுப்பு ஆசிரியர் ஒரு பாடலைப் பாடி மாணவர்களையும் பாட வைத்தார். மாணவர்கள் உற்சாகத்தோடு பாடினர். 'டீச்சர், பாட்டு நல்லாருக்கு' என்று பாராட்டவும் செய்தனர்.

மாணவர்களின் கவனத்தைக் குவித்த அவர் கரும்பலகையில் அழகாய் ஒரு பட்டம் வரைந்தார். இது என்ன? என்று வினவினார்.

பட்டம் என்றனர் ஒருமித்த குரலில்.

"கரெக்டா சொல்லிட்டீங்க, புத்திசாலிங்கடா" என்றார்.

"எங்களுக்குப் பட்டம் கூடவா தெரியாது டீச்சர்?" என்றான் ஒரு சுட்டிப் பையன்.

"நீ ஒழுங்கா ஸ்கூல் வரதாலதான் தெரிஞ்சிருக்கு! சரி நீ இங்க வா" என்று சுட்டிப் பையனை அழைத்து, " நீ பட்டம் வாங்கக் கடைக்குப் போற! கடைக் காரருக்குக் காது கேட்காது, நீ எப்படிப் பட்டம் வாங்குவ?" என்று கேட்டார்.

"கடைல தொங்கும் பட்டத்தைக் காட்டிக் கேட்பேன்"

"அந்தக் கடைல பட்டத்தைத் தொங்கவிடல, அப்போ? "

"அப்ப வேற கடைக்குப் போவேன் டீச்சர்."

"அந்த ஊர்ல வேற கடையே இல்லை....?"

"ம்....., பேப்பர்ல எழுதிக் காண்பிப்பேன் டீச்சர்."

"சரியா சொல்லிட்டே! சரி இப்ப எழுது."

"எனக்குத் தெரியாது டீச்சர்."

"எழுதத் தெரியாம பட்டம் வாங்க முடியாதே!"

"நீங்க எழுதச் சொல்லித் தரலையே!"

"சரி இப்ப எழுத வைக்கவா. நான் சொல்ற எழுத்துகளை எழுது. 'ப' தெரியுமா?"

கையில் சாக்குக் கட்டியுடன் கரும் பலகையில் எழுத வைத்தார். 'ட்' தெரியுமா?

எல்லாம் எழுதினான் ப..ட்..ட..ம்.

"இதான்டா பட்டம், எப்படி நீயே எழுதிட்டியா?"

"ஹையா, எனக்குப் பட்டம் எழுதத் தெரிஞ்சிடிச்சி என்றான் குஷியாக."

இதே பாணியில் இன்னும் சில சொற்களை மற்ற மாணவர்களைக் கொண்டு எழுத வைத்தார். பன்முறைப் பயிற்சி வரி வடிவத்தையும், ஒலி வடிவத்தையும் ஆழப் பதிய வைத்தது. அழகாய் எழுதினார்கள்.

இடைவேளைக்கானமணி ஒலித்தது. 'பட்டம்' எழுதியவன் தயங்கியபடி வந்து, "டீச்சர் கண்ணை மூடிக் கையை நீட்டுங்க"என்றான்

கையில் எதையோ வைத்து விட்டு, "இப்ப கண்ணைத் திறங்க டீச்சர்" என்றான். ஆசிரியரும் அவன் சொன்னபடி செய்து கையைத் திறந்து பார்த்தால் கையில் ஒரு 50 பைசா காசு இருந்தது.

“இது எதற்கு?” என்றார் வியந்து.

“உங்களுக்குத்தான். எடுத்துக்கோங்க. மிட்டாய் வாங்கிச் சாப்பிடுங்க டீச்சர்”

“ஏன்டா?”

“ஏன்னா உங்களை எனக்கு ரொம்பப் புடிக்கும் டீச்சர்....நீங்க எனக்குப் புரியற மாதிரி அன்பா சொல்லித் தந்தீங்க. நீங்க சொல்லித் தந்ததை இப்ப நா பார்க்காமலேயே எழுதுவேன். நீங்க நல்லா சொல்லித் தந்ததாலத்தான் இந்தக் காசு”

ஆசிரியர் நெகிழ்ந்து போனார்.

“உன் அன்பே போதும் கண்ணா, இந்தக் காசு வேண்டாம்” என்றார்.

“நான் தந்தா வாங்கிக்க மாட்டீங்களா டீச்சர்?” என அழவே ஆரம்பித்தான்.

மகிழ்ச்சியுடன் அவனை அணைத்தபடி, “உன்கிட்ட காசு வாங்கினா, எல்லாரும் தருவாங்க. காசு இல்லாதவங்க, டீச்சருக்கு நம்மால தர முடியலியேன்னு கஷ்டப் படுவாங்கல்ல” என்றார்.

“டீச்சர் வேற என்ன தந்தா வாங்கிப்பீங்க?”

“ஒரு பட்டம் வரைஞ்சு, அழகா கலர் பண்ணிக்குடு”என்றதும் மகிழ்வோடு ஓடி விட்டான் பட்டம் வரைய.

ஒரு சிறுவன் தனது காசை மனமுவந்து தந்தால் அது சாதாரணமானதல்ல. ஆசிரியரின் கற்பிக்கும் திறன் அந்தளவு அவனை ஈர்த்திருக்கிறது. கற்பிப்பதன் வெற்றி மாணவன் புரிந்து கொள்வதில்தான் இருக்கிறது.

அந்த மாணவனுக்குத் தன்னால் தானாகவே எழுதவும், படிக்கவும் முடிகிறது என்பதால் எழுந்த ஆனந்தம். தனக்கு இதைச் சாத்தியமாக்கிய ஆசிரியரின் பால் அன்பு பெருகியிருக்கிறது.

அதன் விளைவுதான் அவன் அளித்த பரிசு.

பயனாளியே உணர்ந்து, கேட்காமலே கொடுத்த 50 காசு, ஜனாதிபதி கையால் நல்லாசிரியர் விருது வாங்குவதைவிட உயர்ந்தது அல்லவா?

* * *

**WHO SHOULD BE PREFERRED?**

A LEARNED TEACHER?

OR

A LEARNING TEACHER ?

A TEACHER WHO IS EVER LEARNING

## TEACHING IS A NOBLE PROFESSION

If God and the Teacher are standing together, who does the student salute first?

According to Indian Culture the answer is the Teacher, because without his direction and help, the student could not have met God.

# 5. தலைமை ஆசிரியருக்கு....

*தன்னுடைய மகன் படித்துக் கொண்டிருந்த பள்ளித்தலைமை ஆசிரியருக்கு ஆப்ரஹாம் லிங்கன் எழுதிய கடிதம்*

எல்லா மனிதர்களும் நீதிமான்கள் அல்லர். அனைத்து மனிதர்களும் வாய்மை யானவர்கள் அல்லர், என்பதை அவன் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது என்பதை நான் அறிவேன். ஆனால் அதே சமயம் ஒவ்வொரு அயோக்கியனுக்கும் ஒரு நாயகன் இருக்கிறான் என்பதையும், ஒவ்வொரு சுயநல அரசியல்வாதிக்கும் ஒரு தன்னலம் கருதாத தலைவர் இருக்கிறார் என்பதையும் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

ஒவ்வொரு எதிரிக்கும் ஒரு நண்பன் இருக்கிறான் என்பதையும் சொல்லிக் கொடுங்கள். இது கடினமான காரியம் தான் எனினும் உழைத்துப் பெற்ற ஒரு டாலர், சாலையில் கிடைத்த நூறு டாலரைவிடப் பல மடங்கு மதிப்பு மிக்கது என்பதையும் உங்களால் முடிந்தால் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

தோல்வியிலிருந்து படிப்பினை பெறவும் வெற்றியை அனுபவிக்கவும் கற்றுக் கொடுங்கள். பொறாமையில் இருந்து விலகி நிற்க அவனுக்குப் பயிற்றுவியுங்கள். ஆரவாரமில்லாமல் அமைதியாக இருந்தால் வாழ்வு இன்பத்தைத் தரும் என்பதை அவனுக்கு உணர்த்துங்கள். புத்தகங்களில் பொதிந்துள்ள அற்புதங்களை அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். அதே சமயம் நீலவானில் சிறகடித்துப் பறக்கும் பறவைகளின் புதிரையும், சூரிய ஒளியில் கண் சிமிட்டும் தேனீக்களின் சுறுசுறுப்பையும், பச்சைப்பசேல் என்ற மலைப்பரப்பில் விரிந்து பரந்திருக்கும் பூக்களின் மலர்ச்சியையும் ரசிக்க சிந்திக்க அமைதியான நேரத்தையும் அவனுக்கு அளியுங்கள்.

பள்ளியில் ஏமாற்றுவதைவிட, பெயிலாவது பல மடங்கு கண்ணியமானது என்பதை அவனுக்கு உணர்த்துங்கள். மற்றவர்கள் அனைவரும் தவறு என்று தகிடுதத்தம் செய்தாலும், தனது எண்ணங்கள் சரியானவை என்று உறுதி கொள்ளும் அளவுக்கு அவனுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுங்கள்.

இன்னும், மென்மையானவர்களிடம் மென்மையாக நடந்து கொள்ளவும், முரடர்களிடம் அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளவும் சொல்லிக் கொடுங்கள்.

சுயமாகச் சிந்திக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். எல்லா மனிதர்களின் கருத்துக்களையும் உன்னிப்பாகக் கவனிக்கச் சொல்லுங்கள். ஆனால், அவன் செவிமடுக்கும் அனைத்தையும் உண்மை என்றால் உரைகல்லில் உரசிப்பார்த்து நல்லவற்றை மட்டுமே எடுத்துக் கொள்ளும் பக்குவத்தை அவனுள் ஏற்படுத்துங்கள்.

துன்பம் மேலிடும்போதும், மனம் கனத்துப் போகும் போதும், சிரிப்பது எப்படி என்பதை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். கண்ணீர்த்துளிகள் இழிவு இல்லை என்பதையும் அவனுக்குச் சொல்லுங்கள்.

உலகே மாயம் என்று துறவறம் பூண்டவர்களை எள்ளி நகையாடாமலும், அதே சமயம் சிற்றின்பம் என்றும் மூழ்கிடாமல் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். தனது அறிவையும், பலத்தையும் பொருளீட்ட பயன்படுத்தும், அதே சமயத்தில் ஒரு போதும் தனது இதயத்திற்கும் மனசாட்சிக்கும் ஒரு விலை நிர்ணயித்துவிட வேண்டாம் என்று வலியுறுத்துங்கள்.

கூக்குரலிடும் கூட்டத்தினரின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் தன் காதுகளைப் பொத்திக்கொண்டு பொறுமையுடன் இருக்கவும் சரியானது என்று தான் அறிந்து கொண்ட கொள்கைகளுக்காக துடிப்புடன் எழுந்து போராடவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அவனை மென்மையாகவே நடத்துங்கள். ஆனால் ஆரத்தழுவி செல்லங் கொடுத்துவிட வேண்டாம். ஏனெனில் நெருப்புப் பிழம்புதான் உறுதியான எஃகை உருவாக்குகிறது. பொறுமையாக இருப்பதற்கு வேண்டிய துணிச்சலையும், துணிவாக இருப்பதற்கு துணிச்சலையும் பொறுமையையும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

தன் மீது அபரிமித நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்க அவனுக்கும் கற்று கொடுங்கள்; அப்போதுதான் மனிதகுலம் மீது அவன் அபரிமித நம்பிக்கை கொண்டிருப்பான்.

இவ்வாறு நான் தங்களிடம் கேட்டுக் கொள்வது மிகக் கடினமான காரியம்தான். உங்களால் முடிந்ததைச் செய்து என் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுங்கள். ஏனெனில் எவ்வளவு நல்ல பையன் என் மகன்.

**– ஆப்ரஹாம் லிங்கன்**

புத்தகம் : கனவு ஆசிரியர்

❋ ❋ ❋

# 6. அட்சய பாத்திரம்

அமிர்தலிங்கம் ஓய்வு பெற்ற ஆசிரியர். பிறருக்கு உதவுபவர். தவறுக்குத் துணை போகாதவர். அவ்வூரில் அவரிடம் கல்வி கற்காதவர் அநேகமாக யாருமில்லை.

ஒருநாள் அவரிடம் அவரது மருமகள் கமலா, “மாமா, சென்னையில் நடக்கும் விழாவில் நீங்க கலந்துக்க கலெக்டர் அவர்களிடமிருந்து அழைப்பு வந்திருக்கு” என்றாள் மகிழ்வாக.

“பார்க்கலாம், இன்னும் ஒரு வாரம் இருக்குல்லே என்று சொன்னவர், மாவட்ட ஆட்சியர் பாராட்டு விழாவிற்கு என்னை ஏன் அழைக்கனும்? சரி நம்மிடம் படித்த மாணவனாக இருக்கும் என நினைத்து நூல் வாசிப்பதில் மூழ்கி விட்டார் அமிர்தலிங்கம்.

விழா நாள் வந்தது. வீட்டின் முன் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இருவர் பவ்யமாக வந்து “சார், நாங்க சென்னையிலிருந்து வர்றோம். எங்க கலெக்டர் ஐயா, அமிர்தலிங்கம் ஐயாவையும், அவரது குடும்பத்தினரையும் அழைத்து வர கார் அனுப்பியுள்ளார்”

அழைப்பிதழில் உள்ள பெயர் சரியாக அவருக்கு நினைவுக்கு வரவில்லை. கிட்டத்தட்ட 30 வருடப் பணி அல்லவா! கணக்கில்லாமல் எத்தனையோ மாணவர்களுக்கு உதவி செய்தவராயிற்றே! இந்த ஆட்சியரும் அதில் ஒருவராக இருக்குமோ! ?

விழாவிற்குச் சரியான நேரத்தில் சென்றனர். அவர்கள் விழா முக்கியஸ்தர்கள் இடத்தில் அமர்த்தப்பட்டனர்.

ஆளுநர் மேடைக்கு அழைத்து வரப்பட்டதும், தமிழ்தாய் வாழ்த்து முழங்க அனைவரும் அமைதியாக எழுந்து நின்றனர். விழா நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேறிக் கொண்டிருந்தன.

சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட ஆட்சியரை ஆளுநர் கௌரவித்து வாழ்த்துவார், என்ற அறிவிப்பினால் அரங்கமே கரகோஷத்தில் அதிர்ந்தது.

அமிர்தலிங்கத்திற்கு ஆளுநரை அடையாளம் காண முடியவில்லை. வாழ்த்துரை முடிந்தது. அதைத் தொடர்ந்து ‘இப்போது ஆட்சியர் அவர்களுக்கு ஆளுநர் நினைவுப் பரிசு வழங்குவார்’ என்று அறிவிப்பு வந்தது.

ஆட்சியர் அறிவிப்பாளரிடம் இருந்த மைக்கை வாங்கி, “அனைவருக்கும் வணக்கம். ஆளுநர் அவர்களுக்கு ஆட்சியர் என்ற முறையில் ஒரு வேண்டுகோள்” என்றார்.

“இந்தப் பாராட்டை நான் முதலில் தவிர்த்தேன். காரணம் எனது ஆரம்பப் பள்ளி ஆசிரியர் திரு. அமிர்தலிங்கம் ஐயா அவர்கள்தான். நான் 5-ஆம் வகுப்பு படிக்கும்போது கல்வியோடு ஒழுக்கத்தையும், பண்பாட்டையும், தன்னடக்கதையும், தன்மானத்தையும் கற்றுக்கொடுத்தார் அவர்.”

“புகழுக்கு அடிமையாகக் கூடாது. செய்யும் உதவிக்குப் பிரதிபலன் எதிர்பார்க்கக் கூடாது. சுய விளம்பரம் கூடாது. சமுதாயத்திற்குப் பயனுள்ளதைச் செய்” என்றெல்லாம் போதித்து என்னைச் சிறுவயதிலேயே அறிவுப் பட்டறையில் வார்த்து எடுத்தார்.

“அவர் சொல்லிய கருத்துக்கள் யாவும் அட்சய பாத்திரத்திலிருந்து எடுக்க எடுக்கக் குறையாத அமுதம் போல் இருந்தன. நான் தொடர்ந்து அவர் காட்டிய பாதையில் பணியாற்றுவேன். இதன் பிறகு எனக்கு இது போன்ற வாய்ப்பு கிடைத்தாலும் அதைத் தவிர்த்து விடுவேன். இந்த விழாவும் அவருக்காக ஒத்துக்கொண்டதுதான்” என்ற ஒரே மூச்சில் சொல்லி நிறுத்தியபோது அனைவருக்கும் யார் அந்த அமிர்தலிங்கம் ஐயா என்ற ஆர்வம் எழுந்தது.

ஆட்சியர் கண்கள் கலங்கின. “மன்னிக்கவும். சிறிது உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். இந்த அரங்கத்தில் உங்களோடு ஒருவராக அன்று பார்த்த ஆசானாக அமர்ந்துள்ள அமிர்தலிங்கம் ஐயா அவர்களை மேடைக்கு வரும்படி அழைக்கிறேன்” என்றார்.

மேடைக்கு வந்த அவரது காலில் நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்தார் ஆட்சியர். தமது வயதையும் பொருட்படுத்தாமல் ஆட்சியரை வாரி அணைத்து உச்சி மோந்தார் அமிர்தலிங்கம். ஆளுநர் ஆச்சரியப்பட்டார்.

பிறகு அமிர்தலிங்கம் ஐயா பத்திரத்தை வாங்கி, “இந்தப் பாராட்டுப் பத்திரத்தை பாரதத் தாயின் புதல்வனிடத்தில் ஒப்படைக்கிறேன். ஆம், நான் எனது மாணவனை பாரதத் தாயின் சிறந்த புதல்வனாகப் பார்க்கிறேன். வாழ்க பாரதம். நாம் அதன் புதல்வர் என்று பெருமை கொள்வோம்” எனக் கூறி ஆட்சியரிடம் கொடுத்தார்.

முழு அரங்கமும் கரவொலியால் அதிர்ந்தது.

**- ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்**
மே 2015

* * *

# 7. ஆசிரியர்களுக்கு பத்து உறுதிமொழிகள்

- கலாம்

1. கற்பித்தல்தான் என் ஆன்மா. எல்லாவற்றுக்கும் முதலாவதாக நான் சொல்லிக் கொடுப்பதை விரும்புகிறேன்.

2. மாணவர்களை எதிர்காலத்தின் ஆற்றல் வளமாகக் கருதுவேன். நல்லதையே செய்வேன், நல்வழியிலேயே நடப்பேன்.

3. சராசரி மாணவரைக்கூட மிகச் சிறப்பாகப் படிக்கும் மாணவராக மாற்றும் ஆசிரியராக என்னைக் கருதுவேன்.

4. என் தாய், சகோதரி, தந்தை, சகோதரன் மீது எவ்வளவு அன்பும் அக்கறையும் வைப்பேனோ அதுபோலவே என் மாணவனையும் கருதுவேன்.

5. என்னுடைய வாழ்க்கையே மாணவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் வகையில் நான் நடந்து காட்டுவேன்.

6. என்னுடைய மாணவர்களை நான் கேள்வி கேட்க ஊக்கப் படுத்துவேன். அதன் மூலம்தான் ஆராய்ச்சி மனப்பாங்கு அவர்களிடம் வளரும் என்பதை நான் அறிவேன்.

7. எல்லா மாணவர்களையும் நான் சமமாக நடத்துவேன். மதம், ஜாதி, மொழி அடிப்படையில் எந்தப் பாகுபாடும் பார்க்க மாட்டேன் என்று உறுதியளிக்கிறேன்.

8. நான் என் திறமையை எப்போதும் வளர்த்துக் கொள்வேன். இதனால் என்னால் தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிக்க முடியும் என்று உணர்வேன்.

9. என் மாணவனின் வெற்றி என் வெற்றியாகும். அதை நான் என் வெற்றிபோலக் கொண்டாடுவேன்.

10. நான் ஆசிரியராக இருப்பதை உணர்கிறேன். இந்தியாவின் வளர்ச்சியில் எனக்கும் பங்கு உண்டு என்பதை உணர்கிறேன்.

* * *

**TEACHER'S DAY : SEPTEMBER 5**

# 8. கலாமைச் செதுக்கிய ஆசிரியர்கள்

1. எந்த மேடையிலும் ஓர் ஆசிரியரைப் பற்றி கலாம் குறிப்பிடாமல் இருந்தது கிடையாது. அந்த அளவுக்குச் சிறிய வயதில் அவரின் மிகப்பெரிய ரோல் மாடலாக இருந்தவர் ஆரம்பப் பள்ளி ஆசிரியரான சிவசுப்பிரமணிய ஐயர்.

2. எனது இராமநாதபுரம் வாழ்க்கையில் அவருடன் நான் கொண்டிருந்த உறவு ஆசிரியர் - மாணவன் என்பதற்கு அப்பாற்பட்டு வளர்ந்தது. ஒருவர், தமது சொந்த வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களை, தாம் விரும்பியபடி அமைத்துக்கொள்ள முடியும் என்பதை ஆசிரியர் அய்யாதுரை சாலமோனுடன் பழகியபோது கற்றுக்கொண்டேன்.

   "வாழ்க்கையில் வெற்றி வேண்டும், நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்றால் ஆசை, நம்பிக்கை, எதிர்பார்ப்பு என்ற மூன்று வலுவான சக்திகளைப் புரிந்து கொண்டு, அதில் கை தேர்ந்தவராகிவிட வேண்டும்" என்று அவர் அடிக்கடி சொல்வார். நான் நினைத்தது நிறைவேற வேண்டும் என்றால், அதற்கு நான் தீவிரமாக ஆசைப்பட வேண்டும், அது நிச்சயமாக நடந்தே தீரும் என்று நம்ப வேண்டும் என்பதை அவர் எனக்கு கற்றுக் கொடுத்தார். அவர் சொல்லிக் கொடுத்த இந்தப் பாடத்திற்கு என் வாழ்க்கையே ஒரு உதாரணம்....

   அய்யாதுரை சாலமோன் ஓர் அற்புதமான ஆசிரியர். தங்களின் சுயமதிப்பு பற்றி எல்லாக் குழந்தைகளையும் அறிந்து கொள்ள வைத்தவர் அவர். என்னிடம் தன்னம்பிக்கையை வேரூன்ற வைத்தவர். கல்வியின் பலாபலன்களை அனுபவிக்க முடியாத பெற்றோருக்குப் பிறந்த என்னாலும்கூட. ஆசைப்பட்டதை அடைய முடியும் என்ற நம்பிக்கையை என்னுள் விதைத்தார். "நம்பிக்கை வைத்தால் உன் தலைவிதியை உன்னால் மாற்ற முடியும்" என்று அவர் சொல்வார்.....

3. கலாம் படித்த திருச்சிராப்பள்ளி செயிண்ட் ஜோசப் கல்லூரி ஆசிரியர்கள் ரெவரெண்ட் ஃபாதர் சின்னதுரை, பேராசிரியர் தோதாத்ரி ஐயங்கார் ஆகிய இருவரும் கலாமின் நல்ல எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக விளங்கியவர்கள் ஆவார்கள்.

கலாம் அடிக்கடி சொல்லுவது :

"**என் ரோல் மாடல் என் ஆசிரியர்கள்தான்** " அவர்கள் இன்றி இந்த கலாம் இல்லை. எல்லா மாணவர்களுக்கும் ஆசிரியர்கள் தான் ரோல் மாடல்களாக இருக்க வேண்டும். மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் முதல் 17 வருடங்களை அதாவது 25,000 மணி நேரங்களை ஆசிரியரிடம்தான் செலவழிக்கின்றார்கள். பிறகு ஆசிரியர் அன்றி வேறு யார் தான் அவர்களது ரோல் மாடலாக இருக்க முடியும்?

# 9. ஆசிரியரின் பெயரில் ஒரு பள்ளிக்கூடம்

தஞ்சை பல்கலைக் கழகத்தின் முன்னால் துணைவேந்தர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் ஒருமுறை திரு. அப்துல் கலாமைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

என்னுடைய தொடக்கப்பள்ளி ஆசிரியரும், தேசிய நல்லாசிரியர் விருதும், மாநில நல்லாசிரியர் விருதும் வாங்கிய புலவர் நாகு. ஆறுமுகம் அவர்களைப் பாராட்டவும் கிராமப்புற மாணவர்களோடு கலந்துரையாடவும் அரவக்குறிச்சிக்கு வரவேண்டும் என்றார்.

அதன்படி 18.07.2015 அன்று கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியிலுள்ள ஆறுமுகம் அகாதெமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கு வருகை தந்து சிறப்பித்தார் கலாம். அப்போது தன் உரையில் "இன்றைக்கு இந்த அரவக்குறிச்சியில் ஒரு மாணவன் தனது ஆசிரியரால் ஈர்க்கப்பட்டு அந்த ஆசிரியரின் கல்வியால் ஒரு பேராசிரியர் ஆகி, துணை வேந்தராகும் நிலைக்கு உயர்ந்த பின்பும்கூட அந்த ஆசிரியரை நினைவு கூர்ந்து அவரது பெயரால் இன்றைக்கு இந்த பள்ளியைத் தொடங்கியிருக்கிறார் என்றால் ஒரு மாணவர் தனது ஆசிரியருக்கு கொடுத்த அன்பை, மதிப்பை அளவிடமுடியாது. நான் இதுவரை 2 கோடி மாணவர்களைச் சந்தித்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களை, ஆசிரியர்களை சந்தித்து உரையாடி இருக்கிறேன். ஆனால் இதுவரை ஆசிரியரின் பெயரில் தொடங்கப்பட்ட பள்ளியை நான் பார்த்ததில்லை. இன்றுதான் இப்படிப்பட்ட பள்ளிக்கு வந்திருக்கிறேன்" என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

* * *

## குருவின் வேலை

குருகுல பாடம் முடிந்து ஊர் சென்ற சீடன் ஒருவன், மீண்டும் குருவிடம் வந்து தயங்கியவாறே, "குருவே! தங்களிடம் நான் படித்ததெல்லாம் மறந்து விட்டது. மீண்டும் அந்தப் பாடங்களை சொல்லிக் கொடுப்பீர்களா?" எனக் கேட்டான்.

"இதற்கா இத்துணை தயக்கம். உட்கார் சொல்லித் தருகிறேன்!" என்ற குரு, சீடனுக்கு முதலில் இருந்து பாடங்களை சொல்லித் தந்தார்.

"நன்றி குருவே, பாடங்கள் நன்கு விளங்கி விட்டன. சென்று வருகிறேன்" எனக் கிளம்பிய சீடன், ஒரு மாதத்திற்குப் பின் மீண்டும் குருவிடம் வந்து, "சுவாமி, எனக்கு மீண்டும் பாடங்கள் மறந்து போய்விட்டன. சொல்லித் தருவீர்களா?" எனக் கேட்க, புன்னகைத்த குரு, "அதனாலென்ன.......போதிக்கிறேன்" எனக் கூறி, போதனையை ஆரம்பித்தார். சில நாட்களுக்குப் பின் நன்றி கூறி விடைபெற்றான் சீடன்.

அவன் போனதும், மூத்த சீடன் ஒருவன், "குருவே! அவன் மீண்டும் மீண்டும் வருகிறான். நீங்கள் சொல்லித் தந்துகொண்டே இருக்கிறீர்களே! இது முறையா? முட்டாளான அவனால் கிரகிக்க முடியவில்லை என்றால் அவனை வர வேண்டாம் என்று சொல்ல வேண்டியதுதானே?" என்றான்.

"தரிசு பூமியாக இருந்தாலும் அந்த இடத்தைப் பதப்படுத்தி, தண்ணீர் ஊற்றினால் விரைவில் விளைநிலமாக மாறிவிடும் அல்லவா? அதுபோலத்தான் அவனும். அவன் பதப்படும் வரை சொல்லிக் கொடுக்க வேண்டியது ஆசிரியரான என் கடமை!" என குரு சொல்ல, அவரது மேன்மை உணர்ந்தான் மூத்த சீடன்.

# 10. ஒரு ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும்?

1. விரும்பி இந்த வேலைக்கு வந்திருந்தாலும், விரும்பாமல் வந்திருந்தாலும், வேலையை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

2. அர்ப்பணிப்பு உணர்வு மிகுந்திருக்க வேண்டும்.

3. சமுதாயப் பொறுப்பு மிகுந்திருக்க வேண்டும்.

4. தனது பாடம் மட்டுமின்றி, பல விஷயங்கள் அறிந்திருக்க வேண்டும்.

5. பண்புகளை உடையவராகவும், மாணவர்களிடத்துப் பண்புகளை உருவாக்குபவராகவும் இருக்க வேண்டும்.

6. சிறந்த சிந்தனைகளோடு தொலை நோக்குப் பார்வையுடன் மாணவர்களை உருவாக்குவதில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

7. மாணவர்களின் திறனறிந்து, அவர்களை அவற்றிற்கேற்ப உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

8. தவறுகளைப் பொருட்படுத்தாது, மன்னித்து, மறந்து, தவறு செய்பவர்களையும் திருத்தி நல்வழிப் படுத்த வேண்டும்.

9. எவரையும் ஊக்குவிக்கும் சக்தி (Inspire) உடையவராகவிருக்க வேண்டும். முன் மாதிரியாகவிருக்க வேண்டும்.

10. போட்டிகள், அறைகூவல்கள் நிறைந்த உலகம். இந்தச் சுழல்கள் நிரம்பிய வாழ்க்கை ஆற்றில் எதிர்நீச்சல் போடுவதற்குரிய, அளப்பரிய திறன்களைக் கற்பிப்பவராக இருக்க வேண்டும்.

பெறுவதைவிட அளிப்பதில் தான் பேரின்பம். வாழ்வதற்காகப் பெறுகிறோம்.

**- க. துளசிதாசன்**
புத்தகம் : கனவு ஆசிரியர்

* * *

## GREAT TEACHERS

They don't just teach,
They are mentors,
They are advisors,
They are role models,
They are guides and above all
They are shapers of great
human beings.

* * *

# 11. என் கனவு ஆசிரியர்

❖ நல்லாசிரியர், புரியாதக் கணிதத்தை, பாடத்தைப் புரிய வைப்பவர் மட்டுமல்ல, ஒரு வகையில் வாழ்க்கையையும் புரிய வைப்பவர்.

❖ கனவு ஆசிரியர் வானத்தில் இருந்து மழையாய்ப் பொழிபவர் அல்ல. நிலம் அறிந்து விதைப்பவர், தேவை அறிந்து உரம் போடுபவர், வேலி அமைத்துப் பாதுகாப்பவர். அறுவடை வரையில் அரவணைப்பவர்.

❖ நல்லாசிரியர் நம்பிக்கை ஊட்டுபவர். 'உன்னால் முடியும்' என்று உற்சாகப்படுத்துவர். அவரே வானத்தையும் காட்டுகிறார், சிறகிற்கும் வலுவூட்டுகிறார். அவர், தடுக்கி விழுந்தால் தாங்கி நிறுத்துபவர். முதல் வரிசை மாணவருக்கு மட்டும் முன்னுரிமை கொடுக்காமல் திறனறிந்து தேவையுணர்ந்து உதவி, வழிகாட்டுபவர்.

❖ நல்லாசிரியர் உளவியல் உணர்ந்தவர். அவர் புலம்புவதில்லை, சபிப்பதில்லை, சினம் காட்டுவதில்லை.

❖ நல்லாசிரியர் பயன் கருதிப் பணியாற்றுவதில்லை. அவர் மாணவர்களிடமிருந்து தனக்கென்று எதையும் எதிர்பார்ப்பதில்லை. தனது மாணவர்களின் மகத்தான வெற்றி அவருக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அந்த மகிழ்ச்சியே அவரது எதிர்பார்ப்பு. அவரை இயக்கும் உந்துவிசை.

❖ நல்லாசிரியர் ஒரு சிற்பி. கல்லில் சிலைகளைக் கண்டுபிடிப்பவர். மூங்கிலைப் புல்லாங்குழலாக்குபவர்.

❖ நல்லாசிரியர் அடுத்த தலைமுறையின் மனித வளத்திற்கு அடித்தளம் போடும் சமூக விஞ்ஞானி.

எந்தப் பஞ்சத்தையும் இந்த பாரத தேசம் தாங்கும். **நல்ல ஆசிரியர்களுக்கான பஞ்சத்தைத் தவிர.**

**– ஆர். பாலகிருஷ்ணன்**
புத்தகம் : "கனவு ஆசிரியர்"

✻ ✻ ✻

## 12. TEACHER

There is a story about a king in ancient times who wanted to honour a person who made the greatest contribution to society. All kinds of people came, including, Engineers, doctors and entrepreneurs, and they all presented their cases for receiving the honour. The king was not impressed. Finally an elderly person with a glow on his face walked in and said he was a teacher. The king came down from his throne and bowed to honour the teacher. It is the teacher who makes the **highest contribution** in shaping the future of society.

* * *

## 13. ஆசிரியர் பாரபட்சமில்லாதவர் ஒரு சூரியனைப் போல

துரோணரின் மகன் அஸ்வத்தாமன். ஆனாலும் தன்னைப் பிரதான சீடனாக ஏற்காமல் அர்ஜுனனை ஏற்றுக் கொண்டாரே என்று தன் தந்தை மீது வருத்தம். இதை நேரடியாகத் தந்தையிடம் கேட்டான் :

“என்னைவிட அர்ஜுனனுக்கு நீங்கள் அதிகமாகச் சொல்லித் தரவில்லை என்பது உண்மையானால், அவன் என்னைவிடத் திறமைசாலியாக இருப்பது எப்படி?”

‘நான் என்னவோ உங்கள் அனைவருக்கும் ஒரே மாதிரிதான் பாரபட்சமில்லாமல் வித்தைகளைச் சொல்லிக் கொடுத்தேன். ஆனால், அவனோ உங்களை விட அதிகமாக நன்றாகவே கற்றுக் கொண்டான். சொல்லப் போனால் உங்களுக்குப் பாடம் எடுப்பதை மறைந்திருந்து கவனித்த ஏகலைவன் உங்கள் அனைவரை விடவும், அர்ஜுனனை விடவும், ஏன்.....என்னை விடவும் அதிகமாக என்னிடமிருந்து கற்றுக்கொண்டான்’ என்றார் துரோணர்.

சொல்லிக் கொடுப்பது ஒரே மாதிரி யானாலும், முயற்சியையும் பயிற்சியையும் பொறுத்தே ஒரு மாணவனின் திறமை நன்கு வெளிப்படுகின்றது.

* * *

# 14. ஆண்டவா, என்னை நல்லாசிரியனாக்கு!

## மாணவர் நலனில் அக்கறையுள்ள ஓர் ஆசிரியரின் சிந்தனைகள்

❖ கல்விப் புத்தாண்டைத் தொடங்கும் புத்திளம் புஷ்பங்களே...உங்கள் பள்ளி வாழ்வை வளமாக்க, மங்களப் பொருள்களுடன் உங்களை வரவேற்கிறேன், வாருங்கள்!

❖ இனி நீ பாடச்சுமையை உணராதபடி சுவையுடன் பாடம் நடத்துவதாகச் சங்கல்பம் எடுத்துக் கொண்டுள்ளேன்.

❖ இனி உனது மதிப்பெண்ணை மட்டுமே வைத்து உன்னை மதிப்பதைவிட, உன் தனித்திறன் என்னவென்று கண்டுபிடிப்பதில்தான் என் திறமையே உள்ளது.

❖ ஜுரத்தில் சில தினங்கள் படுத்த பிறகு, நீ பள்ளிக்கு வந்ததும் இனி உன்னிடம் ‘லீவ் லெட்டர் எங்கே?’ என கேட்காமல், ‘இப்போது நீ நலமா?’ என்று கேட்ட பின்பே லீவ் லெட்டரை நினைவு படுத்துவேன்.

வகுப்பு நிர்வாகம் என்பது முக்கியம்தான். ஆனால் உன் **மனநலனும், நட்பும்** எனக்கு மிக மிக முக்கியம்.

❖ இனி வகுப்பில் நான் மட்டுமே பாடம் நடத்துபவராக இல்லாமல், கற்பதையும் கற்பிப்பதையும் நீயும் நானும் சேர்ந்து ஓர் இனிய செயலாக மாற்றிவிடுவோம், வா!

❖ பாடங்களை நடத்தும்போது நீ கேட்பவனாக மட்டுமே இருப்பதால் தான் போரடிக்கிறது. நாம் இருவரும் கலந்து கற்றால் பாடத் திட்டத்தைச் செயல்திட்டமாக மாற்றி விடலாமே!

❖ என் வகுப்பில் நீ தூங்கிவிட்டால் நீ என்னை மதிக்கவில்லை என்று கருதி வந்தேன். ஒரு மாற்றுச் சிந்தனையாக உன் கவனத்தை ஈர்க்க என்னவெல்லாம் செய்யலாம் என இனி நினைத்துப் பார்ப்பேன்.

❖ வாலிப வயதில் உன் விளையாட்டுப் புத்தியை மேம்படுத்த, உன்னை மன இறுக்கத்தில் வருந்தவிடாமல், விளையாட விடுவேன்.

❖ நீ படிக்க வேண்டிய பாடங்கள் பலப் பல. எனக்கு நேரமில்லை என்றுதான் நானும் பலர் கூறுவது போல் நம்பியிருந்தேன். ஆனால் ‘நீ என்னை நம்பிக் கற்க வந்தவன்’ என்ற ஓர் எண்ணமே எனக்குப் புதுச் சக்திகளை வழங்குகிறது.

❖ எனக்கே தெரிகிறது, நடத்தும் பாடத்தில் நான் தெளிவாக இருக்கும்போது மாணவர்களே, நீங்கள் மிக மரியாதையுடன் என்னிடம் நடந்து கொள்வது!

❖ வகுப்பில் சில மாணவரை மட்டும் outstanding என்று தூக்கி வைப்பதும், மற்றவரை stand outside என்று தள்ளி வைப்பதும்தான் இன்றைய கல்வியின் அவலநிலை. இதன் தாக்கத்தை நான் என் வகுப்பிற்குள் அண்டவிட மாட்டேன்.

❖ இந்த மாபெரும் அறப்பணியான ஆசிரியப் பணியில் மேற்கூறிய வற்றைக் கடைப்பிடிக்க நானும் என்னைப் போன்ற ஆர்வமுள்ள ஆசிரியர்களும் ஆண்டு முழுவதும் முயற்சி செய்வோம்.

எங்கள் இஷ்டதெய்வங்களிடம் வேண்டுவோம்.

மாணவர்களே! எங்களது இந்த முயற்சிகள் வெற்றி பெற உங்களது ஒத்துழைப்பும் மிக மிக அவசியம்!

அதன் மூலம் நாங்கள் ஆசிரியர்களாக மட்டும் இருந்து விடாமல், மேலான பொறுப்புணர்வு மிக்க குரு நிலையில் நின்று உங்களை வழிநடத்தும் ஆச்சாரியர்களாக மாறுவோம்!

அதற்கு ஆண்டவா! எங்களுக்கு அருள்புரிவாயாக!

✻ ✻ ✻

# 15. ஆஹா ஆசிரியர்

ஒரு நாள் மாலை பள்ளி விட்டு வந்ததும் என் மகன் அம்மா, நாளைக்கு உன்னை எங்க மிஸ் கூட்டிட்டு வரச் சொன்னங்க என்றான். காரணம் கேட்டதற்கு தெரியலை என்று சொன்னான். என்னவாக இருக்கும் என்று அன்று இரவு முழுவதும் ஒரே குழப்பம். மறுநாள் காலையில் மகனை அனுப்பிவிட்டு, சிறிது நேரத்திற்குப் பிறகு, நானும் பள்ளிக்குச் சென்றேன். கனிவோடு வரவேற்ற அந்த மிஸ், உங்க பையன் நல்லா படிக்கிறான், கையெழுத்து அழகா வந்திடுச்சு, அதோட ஓவியப் போட்டியில் முதல் பரிசு வாங்கியிருக்கிறான் என்று கூறியதோடு, வகுப்பில் உள்ள மாணவர்களைப் பார்த்து, எல்லோரும் கைதட்டுங்க! என்று உற்சாகப்படுத்திய பிறகு, நீங்களும் இதே போல உங்க பெற்றோர்களை கௌரவப்படுத்தணும புரிஞ்சதா! என்றார். உங்கள் வேலைகளுக்கு இடையே நான் கூப்பிட்டதும் வந்ததற்கு நன்றி என என்னிடம் சொன்னார். இன்ப அதிர்ச்சிக்கு உள்ளானேன் நான். இப்படிப்பட்ட ஆசிரியர்களின் அணுகுமுறை அற்புதம்!

✻ ✻ ✻

# 16. அறிவுள்ள பிள்ளைகளை உருவாக்குதற்குரிய சில விதிமுறைகள்

- பெற்றோர்கள் தான் பிள்ளைகளின் முதல் ஆசிரியர். பிள்ளைகள் பெற்றோர்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. பெற்றோர்களின் நடை, உடை, பாவனை, சொல், செயல், எண்ணம், மொழி அனைத்தும் பிள்ளைகளை உறுதியாக பாதிப்பது உண்டு. ஆகவே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கக் கடமைப் பட்டுள்ளார்கள்.

- செல்வத்திற்கு அதிக மதிப்பு கொடுக்கப் படுகின்ற இன்றையக் காலத்தில் கணவன் மனைவி சம்பாதிப்பது என்பது தவிர்க்க முடியாததாக உள்ளது. இருந்தாலும், காலையில் பிள்ளைகள் எழுவதற்கு முன்பே அவசர அவசரமாகக் கிளம்பி, பிள்ளைகள் சாப்பிட்டுவிட்டுத் தூங்கத் தயாராகும்போது வீட்டுக்கு வரும் பெற்றோர்கள் தங்கள் நிலையை மாற்றி குடும்ப வாழ்க்கைக்கும், பிள்ளைகளின் கல்விக்கும் நேரம் ஒதுக்க வேண்டும்.

- பிள்ளைகளின் சிந்தனை, செயல்பாடுகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள மனம்விட்டுப் பேசுங்கள், உறவுப் பாலத்தைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

- கண்டிப்பாலும், தண்டனைகளாலும் பிள்ளைகளைத் திருத்த நினைப்பது அவர்கள் நம்மிடமிருந்து தவறுகளை மறைப்பதற்கும், தப்பிப்பதற்காக பொய் சொல்வதற்கும் வழி வகுக்கும். அன்போடு கூடிய கண்டிப்பு மட்டுமே பயன்தரும். தண்டனைகள் இனிப்புத் தடவிய மருந்து போல் இருக்க வேண்டும்.

- தேர்வில் எடுக்கப்படுகின்ற மதிப்பெண்களுக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் சம்பந்தம் இருப்பதில்லை. பாடத் திட்டங்களுக்கும், பாடப் புத்தகங்களுக்கும் அப்பால் பெறும் ஆழ்ந்த அறிவுதான் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது. எதையும் புரிந்து, அறிந்து கொள்ளும் ஆற்றலை இளம் வயதில் வளர்க்க வேண்டும்.

- வீட்டுப் பாடங்கள், பயிற்சிகள், மாதிரிகள் செய்வதற்கு அது சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கவும், முறைப்படுத்தி அறிக்கைகள் சமர்ப்பிக்கவும் துணை புரியலாம். தாமே அவர்கள் சார்பாக அனைத்தையும் செய்து கொடுப்பது பிள்ளைகளுக்கு அறிவாற்றலைத் தராது; இது சுயமாக சிந்திக்கும்

ஆற்றலை அறவே அழித்துவிடும். நல்லதோ, கெட்டதோ அவர்களையே செய்ய விடுங்கள்.

❖ நல்ல மதிப்பெண் பெற்ற பாடங்களிலுள்ள ஆர்வத்தைப் பாராட்டி, குறைந்த மதிப்பெண் பெற்ற பாடங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை விளக்கி ஊக்குவிக்க வேண்டும்.

❖ கல்வி மற்றும் கல்வி சார்ந்த நிகழ்வுகளில் சாதனை புரியும்போது மனம் திறந்து பாராட்டுங்கள். தனித் திறமையை ஊக்குவியுங்கள். பாராட்டுவதோடு மட்டுமின்றி, சிறிய பரிசுகள் கொடுத்து ஊக்குவிப்பதும் அதிக பலன் தரும்.

❖ பிள்ளைகளின் அறிவு சார்ந்த வளர்ச்சியை, அவர்கள் முன்பு இருந்தமைக்கு தற்போது எந்த அளவு முன்னேற்றம் அடைந்துள்ளனர் என ஒப்பிட வேண்டும். சக மாணவர்களின் வளர்ச்சியோடு ஒப்பிடுவதும், 'நான் படிக்கும் காலத்தில் நான் அப்படிச் செய்தேன், இப்படிச் செய்தேன்' என்று நம் கடந்த கால செயல்பாடுகளுடன் ஒப்பிடுவதும் பலன் தராது.

❖ பள்ளியில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ளுங்கள். கல்வி வளர்ச்சி, பிள்ளைகள் வகுப்பில் நடந்து கொள்ளும் முறை, ஆசிரியர் – மாணவர் உறவு ஆகியவை பற்றித் தெரிந்து கொண்டு ஆசிரியரிடம் பிள்ளைகளின் மேம்பாடு குறித்து விவாதிக்கலாம்.

❖ பிள்ளைகளின் உடல்நலம், மன நலம் மிகவும் முக்கியம். விளையாட்டு, உடற்பயிற்சி, யோகா, மூச்சுப்பயிற்சி போன்றவை உடலுக்கும்,உள்ளத்திற்கும் மகிழ்வூட்டுவதாகும்.

❖ எதிர்மறையான வார்த்தைகள், எண்ணங்கள், விவாதங்கள் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். எதிர்கால கனவுகளுக்கு ஒரு வடிவம் கொடுத்து அதை அடைவதற்கு தன்னம்பிக்கையுடன் செயல்பட வழி காட்ட வேண்டும்.

❖ படிப்புக்கும், அப்பால் சமுதாய உணர்வு, நாட்டுப்பற்று, அன்பு, பாசம், பண்பு, கருணை, உழைப்பு, பொறுமை, மனிதநேயம், சுய சார்பு, சிந்தித்து செயல்படல், சிக்கனம், சேமிப்பு போன்ற நற்குணங்கள் அமைவது உங்கள் மூலமாகவே என்பதனை மறந்துவிடாதீர்கள். ஆசிரியர்களின் பங்களிப்பு கல்வியைத் தாண்டிச் செல்ல கட்டுப் படுத்தப்பட்டு வரும் இன்றைய சூழலில், பெற்றோர்கள் பங்கு அதிகரித்து வருகிறது.

* * *

# 17. உலகம் ஒரு மிகப்பெரிய வகுப்பறை

அன்பு மகன் ஹரிக்கு,
கடிதம் எழுதுவதே மறந்து போன காலத்தில் உனக்கொரு கடிதம் எழுதுகிறேன். இது நலம் விசாரிக்கும் சம்பிரதாயக் கடிதமில்லை. எனது பள்ளியை, கற்றுக் கொடுத்த ஆசிரியர்களை..அவர்களின் தனித்துவங்களை உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்பியே இதை எழுதுகிறேன்.

கிராமத்தின் அரசுப் பள்ளியிலும், சிறுநகரத்தின் தனியார் பள்ளியிலுமாக எனது பள்ளிப்பருவம் கழிந்தது. இப்போது எனது பள்ளியைப் பற்றி நினைக்கையில் அதன் வகுப்பறைகளும், உடன்படித்த நண்பர்களும், பாதியில் படிப்பை விட்டுப் போனவர்களும், நல்வழிப்படுத்திய ஆசிரியர்களும் மனதில் ஒளிர்கிறார்கள்.

எனது பள்ளியில் எல்லா மாணவர்களுக்கும் பிடித்தவர்களாக ஒன்றிரண்டு ஆசிரியர்கள் இருந்தார்கள், ஒரு சிலரை யாருக்குமே பிடிக்கவில்லை. அது ஏன் என்று யோசித்திருக்கிறேன்.

ஒரு ஆசிரியரை ஏன் நமக்குப் பிடிக்கிறது, அல்லது ஒருவரை ஏன் வெறுக்கிறோம், அது வெறும் பாடம் சொல்லித் தரும் விஷயத்தால் மட்டும் ஏற்படுவதில்லை.

நல்லாசிரியர் என்று நான் நெருங்கிப் பழகியவர்களிடம் சில பொதுக்குணங்கள் இருந்தன. அவர்கள் மாணவர்களின் அறிவுத்திறனை, தனித்துவத்தை மேம்படுத்துவதை தங்களது தலையான கடமையாகக் கருதினார்கள். பொய் சொல்லாமல், நேர்மையாக, உண்மையாக, எளிமையாக, பழகுவதற்கு இனியவர்களாக இருந்தார்கள்.

அவர்களின் சொற்களும், கைகளும் அரவணைத்தே நான் உருவானேன். எனது வெற்றியை அவர்கள் தனது வெற்றியாகக் கருதி மகிழ்ந்தார்கள். அடுத்தவரின் வெற்றிக்காக சந்தோஷம் அடைபவர்களில் ஆசிரியர்களே முதலிடத்தில் இருக்கிறார்கள்.

கல்வியும் மருத்துவமும் ஒருபோதும் வேலையாக கருதப்படக்கூடாது. அவை இரண்டும் மனிதனை மேம்படுத்தும் உயர்ந்த சேவைகள், ஆகவே ஆசிரியர்களை எப்போதும் எனது வழிகாட்டிகளாக மதிக்கிறேன்.

ஆசிரியர்களுக்குத் தன்னிடம் படித்த பல மாணவர்களின் முகம் மறந்து போகக்கூடும். ஆனால் மாணவர்களுக்கு தனக்குப் பிடித்தமான ஆசிரியரின் முகம் மறப்பதேயில்லை.

எனது பள்ளி அனுபவத்திலிருந்தும் நான் படித்த கல்வி சார்ந்த புத்தகங்களிடமிருந்தும் ஒரு நல்ல ஆசிரியரிடம் இருக்க வேண்டிய அம்சங்கள் இவை என்று பட்டியலிட் டிருக்கிறேன். இவற்றை தனித்து எழுதுவது எளிது. வாழ்க்கையில் கடைப்பிடிப்பது சவாலானது. ஆனால் இந்தப் பண்புகளை கொண்ட ஆசிரியர்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்களை அடையாளம் கண்டு கொண்டாட வேண்டியது நமது பொறுப்பே.

பொறுமை தான் ஆசிரியருக்கான அடிப்படைப் பண்பு மாணவர்கள் எவ்வளவு முறை ஒன்றைக் கேட்டாலும் புரிந்து கொள்ளாமல் போனாலும், வகுப்பறையில்

ஒழுங்கீனமாக நடந்து கொண்டாலும் ஆசிரியர் பொறுமையாக அணுக வேண்டும். நிதானமும் பொறுமையும் கொண்டவரே நல்ல ஆசிரியராக கொண்டாடப் படுகிறார்.

அடுத்தது தனித்துவம். ஒரு ஆசிரியர் தனித்துவமிக்கப் பண்புகளுடன் இருப்பது அவசியம், கற்பிக்கும் முறையிலும், உரையாடும் பாணியிலும், அன்பை வெளிப்படுத்தும் முறையிலும், மாணவர்களிடம் காட்டும் அக்கறையிலும் இந்தத் தனித்துவம் வெளிப்பட வேண்டும்.

மூன்றாவது பண்பு, கற்பனைத்திறன். அதாவது ஒரு பாடத்தையோ, புத்தகத்தையோ கற்பிக்கும் ஆசிரியர் அதை அப்படியே ஒப்புவிக்க கூடாது. மாறாக தனது கற்பனையைத் துணையாகக் கொண்டு புதிய வெளிச்சத்தில், புதிய கண்ணோட்டத்திலும் கற்றுத்தர வேண்டும். அதற்காக மாற்றி யோசிக்கவும், புதிய சிந்தனைகளை உருவாக்கவும் ஆசிரியர் முன்மாதிரியாக முயற்சிக்க வேண்டும். கற்பனையில்லாத கற்பித்தலே வகுப்பறையை அலுப்பூட்டிவிடுகிறது. அதனால்தான் மாணவர்கள் அதிகம் தோற்றுப்போகிறார்கள்.

அடுத்த பண்பு, அக்கறை ஒரு மாணவன் எப்படிப் படித்தால் எனக்கென்ன என்று இருந்துவிடாமல், அவனது கற்கும் திறனை மேம்படுத்தி அவனை சாதனை செய்ய வைப்பதே ஆசிரியரின் வேலை. ஆகவே தன்னுடைய முழுமையான அக்கறையைப் பேதமில்லாமல் எல்லோரிடமும் காட்ட வேண்டும். அதற்காக மாணவனின் பின்புலத்தையும், அவனது பலம் பலவீனத்தையும் அறிந்து அளவோடு நெகிழ்வான உறவைப் பேணி வர வேண்டும்.

அது போலவே இனிமையாகப் பேசுதல் என்பது முக்கியமானதொரு பண்பு. ஆசிரியர் பேசும் சொற்களே அவர் மேல் மாணவர்களுக்கு விருப்பம் உண்டாகச் செய்கின்றன. ஆகவே சொற்களைப் பயன்படுத்துவதிலும், உரையாடலிலும் அவர் தேர்வுடனிருக்க வேண்டும். அறிவார்ந்த சொற்களைப் பயன்படுத்தும் விதம் ஒரு ஆசிரியரைத் தனித்து அடையாளம் காட்டக் கூடியது. ஆசிரியரின் கோபமும், வசையும், அவதூறு பேசுதலும், குறை சொல்வதும், அவரைப் பற்றிய தவறான எண்ணத்தை மாணவன் மனதில் அழியாத சித்திரமாகப் பதிவு செய்து விடுகிறது. ஆகவே ஆசிரியர்கள் வசை சொற்களை ஒரு போதும் பயன்படுத்தக் கூடாது.

வகுப்பறை என்பது ஒருவழிச் சாலையில்லை. அது இருவழிச்சாலை. அங்கே மாணவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். அவர்களிடமிருந்து சில வேளைகளில் ஆசிரியர்களும் புதியன கற்றுக் கொள்கிறார்கள். ஆகவே ஒரு நல்லாசிரியரின் முக்கியமான பண்பு அறிவுத்திறனை மேம்படுத்திக் கொள்வது.

அதாவது ஆசிரியர்களும் மாணவர்களைப் போலவே தொடர்ந்து வாசித்து தனது அறிவுத் திறனை மேம்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு நிறைய புத்தகங்களை வாசிக்க வேண்டும். துறைசார்ந்த வளர்ச்சிகள், கண்டுபிடிப்புகள் போன்றவற்றை வகுப்பறையில் அறிமுகம் செய்து வைக்க வேண்டும். சமகாலச் சூழல் மற்றும் உலக அளவிலான சமூக மாற்றங்களை அறிந்து கொள்வது, விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியை பயன்படுத்துதல், என்று தனது அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளாத

ஆசிரியர் ஒரு போதும் சிறந்த ஆசிரியராக முடியாது.

மாணவர்களுக்கு பொறுப்புணர்வு இருப்பது போலவே, ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒரு பொறுப்புணர்வு இருக்கிறது. அது கற்றுத்தருதல் மட்டுமில்லை, மாணவனை ஒரு சமூக மனிதனாக மாற்றுவது ஆசிரியர்களின் வேலை. ஆகவே சமூகப் பிரச்சனைகள் குறித்தும், அதன் கலாச்சாரம் பொருளாதாரம், இன, மத வேறுபாடுகள், பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வு அடையச் செய்ய வேண்டியது ஆசிரியரின் வேலையே. ஆகவே சமூக கடமையாற்ற வேண்டிய பொறுப்புணர்வுமிக்க மாணவர்களை உருவாக்குவது ஆசிரியர் கவனமாக மேற்கொள்ள வேண்டிய பணி.

நல்ல ஆசிரியர் வகுப்பறையைக் கலகலப்பாக வைத்துக் கொள்வார். அதற்கு காரணம் அவரது நகைச்சுவை உணர்வு. உணவில் சேர்த்துக் கொள்ளப்படும் உப்பு போல நகைச்சுவையைக் கற்பித்தலில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதே வேளை கேலிப்பேச்சால் எவரையும் புண்படுத்தவோ, அவமதிக்கவோ கூடாது.

ஒரு ஆசிரியரின் உடல்மொழியைத் தான் மாணவர்கள் முதன்மையாக கவனிக்கிறார்கள். ஆகவே உடல்மொழி முக்கியமான ஒன்று. பெரும்பான்மை ஆசிரியர்கள் கைகளைத் தேவையில்லாமல் உயர்த்திப் பேசுவதும், உரத்த குரலில் பேசுவதும், இறுக்கமான முகம் அல்லது சோம்பல் படிந்த முகத்துடன் இருப்பதும் மாணவர்களின் கற்கும் திறனைப் பாதிக்கிறது. ஆகவே நடை உடை பாவனை மூன்றிலும் ஆசிரியர்கள் தனிக்கவனம் கொள்ள வேண்டும். ஆடம்பரம் அலங்காரம் இரண்டையும் ஆசிரியர்கள் செய்யக் கூடாது.

மாணவர்களின் கனவுகளை ஆசிரியர்களே உருவாக்குகிறார்கள் என்பதால், ஆசிரியர்கள் எப்போதும் தூண்டுகோலாக இருக்க வேண்டும். அது படிப்பில் மட்டுமில்லை, விளையாட்டு, நுண்கலை, பொது அறிவு என எந்தத் துறையாக இருந்தாலும் மாணவர்களின் தனித்திறனை வளர்க்கவும் மேம்படுத்தவும் ஆசிரியர்கள் தூண்டுகோலாக இருப்பது அவசியம்.

நல்ல ஆசிரியர் கட்டுப்பாட்டைத் தண்டனையில்லாமல் செயல்படுத்துகின்ற ஒருவராக இருப்பார். வகுப்பறையின் கட்டுப்பாடு என்பது பயத்தால் உருவாக்கப் படக்கூடாது. கட்டுப்பாட்டின் அவசியம் சுய ஒழுக்கம் தொடர்பானது. அதை ஆசிரியர்கள் உணரச் செய்ய வேண்டும். அதை மாணவர்களும் அறிந்து கொள்ள வேண்டும். தண்டனை குறித்த பயம் வகுப்பறையை நரகமாக்கிவிடும் என்பதே உண்மை.

பள்ளியிலும், வெளியிலும், ஆசிரியர்கள் எல்லா மாணவர்களுடனும் நட்புறவோடு பழகுதல் வேண்டும். அந்த நட்புறவு மாணவர்களோடு மட்டுமின்றி சக ஆசிரியர்கள், பள்ளியில் பணியாற்றும் ஊழியர்கள், பள்ளி நிர்வாகிகள் அனைவரிடமும் காட்டப்பட வேண்டும். நட்புணர்வு இல்லாதபோது தான் மாணவர்கள் ஆசிரியர்களை வெறுக்கத் துவங்குகிறார்கள். ஆசிரியர்களிடம் பொய் சொல்லுகிறார்கள்.

இது போலவே ஆசிரியர்களின் தனிப்பட்ட ஒழுக்கம் தவறும்போது அது தனிநபரின் குற்றமாகக் கருதப்படமாட்டாது. அதன் விளைவு கல்வித்துறையை பாதிக்கக் கூடிய ஒன்று. ஆகவே ஆசிரியர்கள் சுய ஒழுக்கத்தோடும் இருப்பது அவசியம்.

குறிப்பாக காலத்தின் அருமையை அறிந்து நேரம் தவறாமல் செயல்படுவதுடன் காலத்தின் முக்கியத்துவத்தை மாணவர்களும் கடைபிடிக்கச் செய்ய வேண்டும்.

நல்ல ஆசிரியர்கள் மாணவர்களிடம் இருந்து எதையும் பதிலுக்கு எதிர்பார்ப்ப தில்லை. அவர்கள் மாணவர்களின் முன்னேற்றத்தை தள்ளியிருந்து ரசித்துப் பாராட்டுகிறார்கள். உள்ளூற சந்தோஷம் கொள்கிறார்கள். அந்த அர்ப்பணிப்பு முக்கியமானது. எந்தச் சூழலிலும் ஆசிரியர்கள், மாணவர்களிடம் எதையும் யாசிப்பதோ உரிமை கொண்டாடுவதோ தவறானது.

எதிலும் புதிதாக என்ன செய்ய முடியும் அதை எப்படிச் செய்வது என்று சிந்தித்துக் கொண்டேயிருப்பது தான் நல்லாசிரியர்களின் இயல்பு. ஆகவே புதியன விரும்புவதும், அதை தேடிப்போய் அறிந்து வருவதும், மாணவர்களை அழைத்துப் போய் அறிமுகம் செய்து வைப்பதும், ஆசிரியரின் முக்கியமான பண்புகளில் ஒன்று. அந்தத் தேடுதல் தான் மாணவர்களை மேம்படுத்தும் முக்கிய காரணி. நல்ல ஆசிரியர் தன் வாழ்நாள் முழுவதும் தேடிக்கொண்டும், கற்றுக் கொண்டுமே இருப்பார்.

இந்தப் பண்புகள் மட்டுமே முடிவானதில்லை. இவை சிறிய வரையறை மட்டுமே. இதற்கு வெளியிலும் நிறைய நல்ல குணாம்சங்கள் அறநெறிகள் இருக்கக்கூடும்.

கல்வி முற்றிலும் வணிகமயமாகி வரும் சூழலில் ஆசிரியர்கள் தங்களது பணிச்சுமைகளுடனும், பொருந்தாத பாடத் திட்டத்துடனும் ஒரு பக்கம் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மறுபக்கம் தங்களது மாணவர்களின் தனித்திறன் மற்றும் கல்வியில் முன்னேற்றம் தர போராடுகிறார்கள்.

நல்லாசிரியர் உருவாக நல்ல கல்விச்சூழல் வேண்டும். அவரது செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளும் நிர்வாகமும் சக ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் வேண்டும். கூடவே அவரது எளிமையை, நல்லெண்ணத்தைப் புரிந்துகொண்டு செயல்படும் மாணவர்களும், வகுப்பறைச் சூழலும் அவசியமானது. அத்தனையும் ஒன்று சேரும்போது தான் நல்ல ஆசிரியர் உருவாக இயலும்.

இவை எனது அனுபவம் கற்றுத்தந்த பாடங்கள். கற்றுக்கொள்ளுதல், வாழ்நாள் முழுவதும் மேற்கொள்ள வேண்டிய பணி. அதன் ஆரம்பமே பள்ளி, கல்லூரிகள். ஆகவே ஒருவன் தனக்கான ஆசானைக் கண்டடைதல் என்பது அறிந்து மேற்கொள்ள வேண்டிய முக்கியமான பணி.

உலகம் ஒரு மிகப்பெரிய வகுப்பறை. இங்கே சில நேரம் நாம் மாணவர்களாக இருக்கிறோம். சில நேரம் நாமே ஆசிரியர்களாகி விடுகிறோம். அந்தத் தருணத்தில் நாமும் இதே பண்புகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை மறந்து விடாதே.

கற்றுக்கொள். கற்றுக் கொடு, கற்றதை செயல்படுத்து.

**– எஸ். ராமகிருஷ்ணன்**
சென்னை

❋ ❋ ❋

# 18. அரும்பில் ஓர் அமிலவினை!

“ஒன்னப் பாத்தா நல்ல பொண்ணா இருக்கே. போயும் போயும் அந்த ஆசிட் பையனையா நீ பார்க்க வந்தே? ”

“இல்ல சார், எங்க பிரேமைப் பார்க்க வந்திருக்கோம்” என்றாள் ரமா வேகமாக.

அந்தச் சிறுவர் சீர்திருத்தப் பள்ளி (கூர்நோக்கு இல்லம்) அதிகாரி, 15 வயது ரமாவின் கண்களை உற்று நோக்கினார். உடனே அவர், “ஏய், அந்த ஆசிட் கேஸைக் கூப்பிடு” என்றார்.

செங்கல்பட்டில் உள்ள சிறுவர் கூர்நோக்கு இல்லம். அங்கு சிறைப்பட்டிருக்கும் பிரேம், நான்கு மாத மன உளைச்சலுக்குப் பிறகு இன்று தன் நண்பர்களைச் சந்திக்க இருக்கிறான்.

ஒரே புழுக்கம், அங்குள்ளவர்களின் முகங்களில் ஒரு வெறுமை, தூரத்தில் பிரேம் அங்கும் இங்கும் பார்த்தபடி கூச்சத்துடன் வருகிறான்.

எப்படியெல்லாம் விதவித ஆடைகளில் கலக்கியவன், இன்று இப்படி வெள்ளை டிரவுசருடன், முடி வெட்டப்பட்டு, முகம் வாடி.. பாவம் பிரேம்.

எழிலும் ரமாவும், பிரேமைப் பார்த்ததும் இரண்டு கைகளையும் விரித்து அவனை அழைத்தனர்.

ஓடி வந்த பிரேம், “எழிலு, ரமா....”

இவ்வளவுதான் அவனால் கூற முடிந்தது.

அந்த மூவரில் யார் அதிகம் அழுகிறார் என ஜெயிலர் பார்த்துக் கொண்டிருந்தார்.

சிறு நிமிடங்களுக்குப் பின், “டேய், உன் கஷ்டத்தை எங்ககிட்ட கூறியிருக்கக் கூடாதா? ஏண்டா இப்படி செஞ்சே?” என எழில் கேட்டான்.

கடந்த பிப்ரவரியில் உஷா டீச்சரின் முகத்தில் இதே பிரேம் ஆசிட் வீசிய செய்தி தீயாய் எரிந்தது. சென்னையில் ஆசிரியை உமா மகேஸ்வரி கொலை செய்யப்பட்ட செய்தி அளவிற்கு இதுவும் பரபரப்பை ஏற்படுத்தியது.

“எழில், நானும் யோசிச்சிப் பார்த்தேன். நம்ம டீச்சருங்க எப்போ பார்த்தாலும படி, படின்னு என்னை ஏன் வெரட்டினாங்க? நான்தான் ‘டல்’ன்னு அவங்களுக்குத் தெரியுமில்லே? நான் படிச்சி என்ன செய்யப் போறேன்னு யாருமே எனக்குப் புரிய வைக்கல்லே...” என்று கூறி அழுதான் பிரேம்.

எழில் பிரேமின் தோளைப் பிடித்தான்.

“ஸ்கூல்லதான் மார்க், மார்க்னு பொலம்பினாங்க, வீட்டிலேயும் அதையே கூறிக் கூறி வெறுப்பேத்துனாங்க.”

“அதுக்காக நீ நம்ம உஷா டீச்சருக்குச் செஞ்சது குரு துரோகம்டா, மகா கேவலம்” என்றாள் ரமா கோபமாக.

இவன் செஞ்சது 100% தப்புதான் ரமா.

ஆனா இப்ப இவன் சொன்னதிலே 1% கூடத் தப்பில்லே.

“எழில், நீயா இப்படிப் பேசுற?” என்றாள் ரமா.

“ஆமா, யாரு அன்பா பாடம் நடத்துறாங்க? பந்தயக் குதிரை மாதிரிதான் ஸ்கூல்ல நம்மை ஓட்றாங்க?”

பிரேம் சற்று நிதானமாக, “இல்லடா, நானும் அப்படித்தான் நினைச்சேன். அது தப்புடா” என்றான்.

பெரிய தப்பைச் செய்துவிட்டு, பெரிய ஆள் மாதிரி பேசுபவனை ரமா கூர்ந்து பார்த்தாள். பிரேம் அமைதியாக, ரமா எல்லோரும் என்னைத் திட்டுனாங்க, சபிச்சாங்க, அடிச்சாங்க, ஆனா என் தப்பு என்னன்னு யாருமே எனக்குக் காட்டல என்றான்.

“நீ எவ்வளவு பெரிய தப்பு பண்ணேன்னு ஒனக்கே தெரியாதா?”– ரமா படபடப்புடன்.

“சத்தியமாகத் தெரியலே. நா செஞ்சது எல்லோருக்கும் தெரியும். ஆனா நான் ஏன், எந்தச் சூழ்நிலையில அதச் செஞ்சேன்னு, இங்க ஒரு ராமகிருஷ்ண மடத்து சாமி வந்து சொன்னப்பதான் எனக்கே புரிஞ்சது.”

“என்னடா அது?” – எழில் ஆர்வத்துடன்.

“சாமி ஒரு சம்பவம் சொன்னாரு. விவேகானந்தர் ஸ்கூல்லே படிச்சப்போ, பூகோள டீச்சர் ஒருத்தர் ஒரு ‘பர்ட்டிகுலர்’ நாடு எங்கே இருக்குன்னு கேட்டாராம். விவேகானந்தர் பதிலைச் சரியாத்தான் சொன்னாரு. ஆனா, அந்த சார் அத தப்புன்னு கூறி அவரை அடிச்சுட்டாராம்.

“அந்தக் காலத்திலேயும் இந்த மாதிரி டீச்சருங்க இருந்தாங்களா?”

ரமாவின் கேலியைப் பொருட்படுத்தாமல் பிரேம், “சார் எப்படி இருந்தாலும் படிக்கிறவன் அவரிடம் மரியாதை காட்டணும் என்பதற்காக, விவேகானந்தர் அமைதியா அடி வாங்கினாரு. ஆனா கம்பீரமாகவும் பொறுமையாகவும் நின்னாரு” என்றான்.

“ஓ, ரியல் ஹீரோடா அவரு”

“அதோட, விவேகானந்தர் தன் அம்மாகிட்ட இதச் சொன்னப்ப அவங்க, ‘மகனே, நீ எப்போவும் தைரியமா இருக்கணும், உண்மையா நீ இருக்குறப்போ கொஞ்சம் கஷ்டம் வரலாம். அதுக்கெல்லாம் கலங்காம இருந்தால்தான் நீ வீரன், அப்படின் னாங்களாம்” – பிரேம்.

“இப்படியெல்லாம் யார்ரா நமக்கு இப்ப வீட்ல சொல்றா?” என்றான் எழில் பெருமூச்சுடன்.

“அதோட, மறுநாள் அந்த சாருக்குத் தான் சொன்னது தப்புன்னு புரிஞ்சப்போ, விவேகானந்தரிடம் தன் தப்பை ஒத்துக்கிட்டு, அவரைப் பாராட்டினாராம்.”

சில நொடிகள் அங்கு ஓர் இனிய மௌனம்.

தனது சீருடை ட்ரவுசரைச் சரி செய்து கொண்டே பிரேம், எழில், விவேகானந்தர் எப்படி தனக்கு வந்த கஷ்டத்தைத் தாங்கி நின்னாரு. டென்ஷனாகாம இருந்ததால அவரு ஒரு சிறந்த வீரனா மாறினாரு இல்லியா? அவங்க அம்மாவும் அவருக்கு எப்படி தைரியம் தந்தாங்க!ம்...எங்கம்மாவா இருந்தா, கலாட்டா பண்ணி டீச்சரை ஒரு வழி பண்ணியிருப்பாங்க என்றான்.

பிரேம் பேசப் பேச அவனது கண்கள் பளிச்சிடுவதைப் கவனித்தாள் ரமா.

"ஆனா, டீச்சருங்க என்னைப் பொருட் படுத்தாதபோது, நா இப்படி கோழையா கிரிமினல் மாதிரி தப்பு செஞ்சிட்டேன்டா" என விசும்பினான்.

"அழாதேடா, ஏதோ நடந்துடுச்சு"

"பிரேம், எங்களால முடிஞ்ச எதையும் ஒனக்காகச் செய்றோம். தைரியமா இரு."

தாங்க்யூ ரமா, உங்க ரெண்டு பேரையும நா வெறுத்திருக்கிறேன். ஆனா இப்பத்தான் உங்களப் பத்தி எனக்குப் புரியுது. எனக்காக ஒரு ஹெல்ப் செய்யுறியா?

"நிச்சயமாடா"

"சரி, இதோ வரேன் என்று உள்ளே சென்றவன் வேகமாக ஒரு கடிதம் எழுதினான். ஒட்டினான். பிறகு எழிலிடம் தந்து, "இதை டீச்சர்கிட்ட கொடு" என்றான்.

"யாரு? உஷா டீச்சர்கிட்டயா...? எழில், பாரு இவன் என்ன சொல்றான்னு? என்றாள் ரமா பயந்தபடி.

"பிரேம், டீச்சர் நம்ம ஸ்கூல் பசங்களக் கண்டாலே எரிஞ்சு விழுறாங்களாம். வேண்டாம்டா இந்த ஐடியா?"

"ப்ளிஸ்டா, எனக்காக நீ இதக் கட்டாயம் செய்யணும்."

அவனது கெஞ்சலைப் பார்க்க முடியாத இருவரும், சரி உன்னோட நிம்மதிக்காகச் செய்றோம் என்றனர்.

மறுநாள் எழிலும் ரமாவும் டீச்சரைச் சந்திக்கத் தவித்தனர்.

'என் மூஞ்சியைக் கோரமாக்கிய ராஸ்கலின் நண்பர்களை நான் பார்க்கவே மாட்டேன்' என்று டீச்சர் தீர்மானமாக இருந்தார். அடுத்த நாளும் இருவரும் அலைந்தனர்.

முடிவில், டீச்சர், எங்க தவறுகளை மன்னிச்சி, எங்கள நீங்க 'விஷ்' பண்ணினாத்தான் நாங்க பத்தாவதிலே நல்ல ரேங்க் எடுக்க முடியும் என்றான் எழில்.

அதனால் உஷா டீச்சரின் கோபம் ஓர் ஒண்ணே கால் கிராம் குறைந்தது.

வாசலில் அவர்களை நிற்க வைத்தே, "சொல்லித் தொலைங்க. உங்களப் பார்க்கவே அவமானமா இருக்கு" என்று படபடத்தார்.

"சாரி டீச்சர், அவன் ஏதோ வேகத்திலே செஞ்சுட்டான்...." என்றாள் ரமா.

"ஓஹோ, அந்த வெறிபிடிச்சவனுக்கு நீ வக்காலத்தா? அவன் ஆசிட் எடுத்து அடிக்கத் திட்டம் போடுறான்னு, ஏன் எனக்கு யாருமே ஒரு வார்த்தை கூட சொல்லல்லே?

"டீச்சர், நாங்க எங்க மொத்த க்ளாஸ் சார்பிலே இப்ப மன்னிப்பு கேக்குறோம் " என்றான் எழில்.

டீச்சர் 10 நொடி வெறுமையான மௌனத்திற்குப் பிறகு, மன்னிப்பு கேக்குறது ரொம்ப சுலபம்பா, இந்தக் கோரமான முகத்தோட நா இனி ஆயுசு பூராவும் வாழணுமில்லே! என்று கூறிக் கலங்கினார்.

தொண்டையைக் கனைத்தபடி எழில், "இந்த நாலு மாசமா எல்லாரும், டீச்சர் மேல ஆசிட் வீசின கும்பல்தானேன்னு எங்களப் பார்த்துச் சொல்லும் போது, அவமானமா இருக்கு டீச்சர் என்றான்.

"ஒனக்கே இப்படின்னா, எனக்கு எப்படி இருக்கும்?" டி.வி.க்காரங்க, பத்திரிக்கைக் காரங்க எல்லாம் என் முகத்தைக் காட்டி, அதப் பத்தியே பேசி.., என்ன ஒரு நரக வேதனை தெரியுமா?

"லெட்டர் எடு" என்றாள் ரமா சைகையால்.

எழில் மெல்ல, "டீச்சர், இது கஷ்டப்படுற ஒருத்தனோட கண்ணீர்க் கடிதம், ப்ளீஸ், படிங்க" என்றான்.

டீச்சர், யாருடையது? என்றபோது எழிலுக்கு வியர்த்தது. எச்சிலை விழுங்கிவிட்டு, "டீச்சர் நாங்க பிரேமைப் பார்த்துட்டு வர்றோம்..." என்பதற்குள்,

"அந்தப் பாவியைப் பார்த்துட்டு, எங்கிட்டே வர என்ன தைரியம்?" என்றார் டீச்சர் வேகமாக.

"அவன் இப்ப ரொம்ப கவலப்படுறான். உங்கள நெனச்சி அழுதான் டீச்சர்" ரமா கூறிக் கலங்கினாள்.

"நோ, அவனோட பேச்ச எங்கிட்ட எடுக்காதே" என்று கூறிவிட்டு டீச்சர் கதவை வேகமாகச் சாத்தி விட்டு வீட்டிற்குள் போய்விட்டார்.

சிறுவனாக சுவாமி விவேகானந்தர், ஆசிரியர் முன்பு நடந்து கொண்ட விதம் ரமா மற்றும் எழிலின் மனங்களிலும் ஊறிவிட்டதால் இருவரும் வாசலிலேயே உட்கார்ந்துவிட்டனர்.

சற்று நேரம் கழித்து டீச்சர் வாசலில் எட்டிப் பார்த்தபோது, அந்த 'இரண்டும்' போகாமல் அங்கேயே சத்தியாகிரகிகள் போல் இருந்தன.

டீச்சர் எரிச்சலாக வெளியே வந்ததும், "பிரேமை மன்னிச்சிடுங்க மேம்" என்று ரமா கெஞ்சினாள். கடிதத்தை வெடுக்கென வாங்கிப் பிரித்தார் டீச்சர்.

டியர் டீச்சர், என்ன எழுதுறதுன்னு புரியல்லே. உங்களுக்கு ரணம் பெரிசுன்னு சொன்னாங்க. இப்ப நீங்க ஓகேயா?

சாரி மிஸ், ஐ ரியலி மிஸ் யு ஆல். என்னை நம்புங்க டீச்சர். நான் எப்படி, இந்த மாதிரி கொரங்குத்தனமா செஞ்சேன்னு நாலு மாசமா யோசிக்கிறேன். இப்படி இருக்குமோன்னு தோணுது.

மக்கான எங்கிட்ட சில டீச்சருங்க படி, படின்னு சொன்னது என்னை மட்டம் தட்டுன மாதிரி இருந்தது.

அந்த எரிச்சல்ல நான் இருந்தப்போ, நல்லபடிக்குற எழிலை என் முன்னாடி. ஓவரா எப்பவும் பாராட்டிக்கிட்டே இருப்பாங்க. வீட்டிலேயும இதையே சொல்லிக் குத்திக் காட்டுவாங்க. அப்பதான் தப்பு பண்ணத் துணிஞ்சேன்.

கேர்ள்ஸ் முன்னாடி என்னை மக்குன்னு சொன்னப்போ, நான் யாரையாவது பழிவாங்க நெனச்சேன். என்னிக்கு நா ரொம்பவும் டிஸ்டர்பா இருந்தேனோ, அன்னிக்கி நீங்க மாட்டினீங்க.

எங்க மார்க்காலே எங்களுக்கு டென்ஷன் இருந்த மாதிரி, உங்களுக்கும் டென்ஷனும் ப்ரஷரும் இருந்ததுன்னு எனக்கு அப்ப புரியல்லே டீச்சர்.

பிரின்ஸிபாலிடம் நீங்க ஏச்சு வாங்குறதைப் பார்த்திருக்கிறேன். அது எனக்காகத்தான் இருந்திருக்கும்.

சாரி டீச்சர். நான் பொய் சொல்லல. மேல எழுத என்னால முடியல்ல. அழுகை அழுகையா வருது.

நாலு மாசமா, நா என் அம்மாவைக்கூட அவ்வளவு முறை நெனைச்சிப் பார்க்கலே. உங்களத்தான் பலமுறை நெனக்கிறேன். கனவிலேயும் வர்றீங்க.

விசிட்டர்நேரம் முடியப்போவுது டீச்சர்....நான் பெரிய ஆள் மாதிரி ஏதோ எழுதிட்டேன்.

நான் இப்போ திருந்தி வர்றேங்கறது சத்தியம் தான்னு எனக்கு எப்போ தெரியும்?

“உன்னை நான் மன்னிச்சுட்டேன்டா”ன்னு நீங்க ஒரு வரி எழுதினாத்தான், அது எனக்குத் தெரியும். மன்னிப்பீங்களா டீச்சர்?

இப்படிக்கு, யூஸ்லெஸ் பிரேம்.

தன் கண்ணில் கண்ணீரா என டீச்சரே வியந்தார். கண்ணீருக்குத் தெரியாதே, சிந்தித்துச் செயல்பட..!

கிடுகிடுவென்று டீச்சரின் கன்னங் களிலிருந்து அது இறங்கி ‘மன்னிப்பீங்களா டீச்சர்!’ என்ற வார்த்தையின் மீதே விழுந்தது.

கடிதத்தைக் கிழித்து வீசுவார் என்று நினைத்த எழிலிடம், “தம்பி, நான் பிரேமைப் பார்க்கணும், யாரிடம் ‘பர்மிஷன்’ வாங்கணும், சொல்லு? என டீச்சர் கேட்டதும் இருவரும் ஒரு கணம் திணறிப் போயினர்.

❋ ❋ ❋

“ I had a teacher who used to say, that every extra year of education adds five thousand pounds to your income for life”

Intimary by Hanif Kureishi

❋ ❋ ❋

**THE SOUL OF MY LIFE**

My dear mam, you have a smile,
That throws my worries a mile.
You fulfill all my funny wishes,
Oh! yes, you make delicious dishes,
you accept my sorries,
and solve my queries.
You correct me to make me fit,
and motiviate me when I am about to quit.
You work hard everyday,
so that I can be great some day...
You heart is as light as a feather,
after all you are my dear mam...

***- Mansikaa Reshmaa. R XI BG4***

❋ ❋ ❋

## 19. காரணம் யார்?

நீண்ட காலத்திற்குப் பிறகு, தன் பள்ளி ஆசிரியரை தற்செயலாகச் சந்தித்தான் ஒருவன். ஆசிரியருக்கும் தன் பழைய மாணவனைச் சந்திதத்தில் மகிழ்ச்சி. இருவரும் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி மகிழ்ந்தார்கள்.

பழைய மாணவன் ஆசிரியரிடம், "உங்களிடம் படித்த மாணவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான முன்னேற்றம் அடைவதில்லையே.. சிலர் தாழ்ந்தும், சிலர் உயர்ந்தும் இருக்கிறார்களே அது ஏன்?" என்று கேட்டான்.

ஆசிரியர்களுக்கு எரிச்சலூட்டும், ஏமாற்றமூட்டும் கேள்விதான் இது! என்றாலும் நான் இதற்காக வருத்தமோ, கோபமோ அடையவில்லை. ஓர் உதாரணம் சொல்கிறேன் கேள்.

"சொல்லுங்கள் ஐயா."

"தூண்டில் போட்டு மீன் பிடிக்கக் கற்றுக் கொள்கிறார்கள் இருவர். ஒருவன் ஆறு, குளம், ஏரிகளில் தூண்டில் போட்டு ஏராளமான மீன்களைப் பிடித்து சந்தோஷமாக வாழ்கிறான். மற்றவன் செயற்கையான நீச்சல் குளத்தில் தூண்டிலைப் போட்டுவிட்டுக் காத்து இருக்கிறான். மீன்கள் சிக்கவில்லை என்று அழுகிறான். கற்ற கல்விக்குச் சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்பவன் சிறப்படைகிறான். தவறான இடத்தைத் தேர்ந்தெடுப்பவன் சிறுமை யடைகிறான் " இவ்வளவே!

புரிந்து கொண்டதற்கு அடையாளமாகத் தலையாட்டினான் அந்தப் பழைய மாணவன்.

* * *

## 20. அன்பு

அன்பை வெளிப்படுத்தும் எதையும் கொண்டு வாருங்கள் என்று நான்கு மாணவிகளை அனுப்பினார் ஆசிரியை.

ஒரு மாணவியின் கைகளில் மலர் இருந்தது.

இன்னொரு மாணவியிடம் வண்ணத்துப் பூச்சி இருந்தது.

மற்றொரு மாணவியிடம் ஒரு குஞ்சுப் பறவை இருந்தது.

முதலில் கிளம்பிப்போன மாணவியோ கடைசியில் வெறுங்கையோடு வந்தாள். கேட்டபோது சொன்னாள்.

"நானும் மலரைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. செடியிலேயே இருக்கட்டும் என்று விட்டுவிட்டேன்.

வண்ணத்துப் பூச்சியைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. சுதந்திரமாய்ப் பறக்கட்டும் என்று விட்டுவிட்டேன்.

குஞ்சுப் பறவையைப் பார்த்தேன். தாய்ப்பறவை தேடுமென்று விட்டுவிட்டேன்." அந்த மாணவியை அணைத்துக்கொண்ட ஆசிரியை சொன்னார்.

"அன்பு என்றால் இதுதான்"

ஒன்றுமே கொடுக்க வேண்டாம். எதையுமே பறிக்காமல் இருந்தால் அது போதும்.

எதையும் காயப்படுத்தாமல் இருப்போமே.

நாம் உலகிற்கு எதையேனும் கொடுக்க வேண்டுமென நினைத்தால் அன்பைக் கொடுப்போம்.

ஏனெனில் உலகில் எங்கும் பரவிக் கிடப்பது அன்பு ஒன்றுதான். ஆனால் உலகம் அதிகமாக ஏங்கிக் கிடப்பதும் அதே அன்புக்காகத்தான்.

* * *

# 21. குரு ப்ரீதி

டாக்டர்., சங்கர் தயாள் சர்மா ஜனாதிபதியாக இருந்த சமயம், அரசுமுறை பயணமாக மஸ்கட்டுக்குச் செல்கிறார்.

அந்த நாட்டின் மரபை மீறி அரசரே விமானநிலையம் வந்து அவரை வரவேற்க காத்திருக்கிறார்.

விமானம் நின்று படிகள் இணைக்கப்பட சர்மா அவர்கள் வெளிப்படுகிறார்.

அவரைக் கண்டதும் அரசர் படியில் ஓடிச் சென்று அவர் கைகளைப் பற்றிக்கொண்டு, அளவளாவிக் கொண்டு இறங்கி வருகிறார்.

இது அந்நாட்டு அதிகாரிகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் கொஞ்சம் அதிகப் படியாகவே தோன்றுகிறது.

எதுவும் காட்டிக் கொள்ளவில்லை. அரசர் ஆயிற்றே..

ஆயிற்று...

அரசு சார்ந்த காரியங்கள் அனைத்தும் முடிந்து இருநாட்டு தலைவர்களும் கூட்டாக பத்திரிக்கையாளர்களைச் சந்திப்பு நடைபெறுகிறது.

சம்பிரதாய கேள்விகள் முடிந்து அந்த நாட்டு பத்திரிகை நிருபர் அந்த கேள்வியை அரசரின் முன் வைக்கிறார்.

“இதுநாள்வரை எத்தனையோ நாட்டின் உயர் தலைவர்கள் வந்தபோதும் நேரில் வராத அரசர் ஒரு ஜனாதிபதியை வரவேற்க ஏன் மரபை மீறி வரவேண்டும். அப்படி என்ன அவர் சிறப்பு?”

அங்கே ஒரு சிறு சலசலப்பு.

அரசர் பதிலளிக்கிறார்.

“நான் இப்போது அரசனாக இருக்கலாம். அவர் ஜனாதிபதியாக இருக்கலாம். ஆனால் நான் இந்தியாவில் பூனா பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது எனக்கு கல்வி போதித்த ஆசான் அவர்.

வெறுமனே கல்வி போதித்தலையும் தாண்டி, அந்நாட்டின் கலாச்சார பண்பாடுகளைப் பற்றிய தெளிவான பார்வையை எனக்குக் கொடுத்தவர்.

இன்றளவும் நான் ஓரளவு பண்பானவனாக இருப்பதாக நினைப்பதற்கு அவரின் தோழமையான வழிகாட்டுதலும் ஒரு காரணம்.

இந்திய மண்ணில் கல்வி போதிக்கும் ஆசிரியரைக் கடவுளுக்கு நிகராக போற்றுகிற பண்பாடு கொண்டவர்கள் அவர்கள்.

கொஞ்சம் காலம் நானும் அந்த மண்ணில் இருந்தவனில்லையா..?

அந்தப் பண்பாடு எனக்கும் வருவதில் ஆச்சரியம் என்ன இருக்கப் போகிறது ”என பெருமையாகக் குறிப்பிடுகிறார்.

சர்மா அவர்களுக்கு பூரிப்பாக இருக்கிறது. ஒரு அன்னிய தேச மாணவனுக்கு சிறப்பான பண்பை போதித்த ஆசிரியராக நெகிழ்வில் அவர் குழைந்து போகிறார்.

* * *

# 22. ஆசிரியர் பணியே அறப்பணி

சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இராஜபாளையம் ஹோட்டல் ஒன்றில் மேசை துடைக்கும் வேலையை செய்து வந்த பொன்னுதுரை என்ற பள்ளி மாணவர் தற்போது பிரபலமான சிமெண்ட் கம்பெனியில் கெமிக்கல் இன்ஜினியராக பணியாற்றப் போகிறார்.

பொன்னுதுரை கடந்து வந்த பாதை கரடு முரடானது மட்டுமல்ல, இன்றைய ஏழை எளிய இளைய தலைமுறைக்கு வழிகாட்டியும் கூட.

பொன்னுதுரைக்கு 5 வயது ஆன போதே இவரது அம்மா தற்கொலை செய்து கொண்டார். தந்தையோ மறுமணம் செய்து கொண்டு, பெற்ற மகனை பாட்டி வீட்டிற்கே அனுப்பி விட்டார். பொன்னுதுரையின் உறவினர்கள் எல்லோரும் ஏழ்மையான ஆலைத்தொழிலாளர்கள். அவர்களுக்கு பாரமாக இருக்க விரும்பாமல் இலவச மாணவர் விடுதியில் சேர்ந்து பள்ளியில் படிக்கத் தொடங்கினார்.

10ஆம் வகுப்பில் 96% மதிப்பெண்கள் பெற்ற இவரை ITIயில் சேர்ந்து படிக்குமாறு பலரும் ஆலோசனை கூறினார்கள். ஆனால் பொன்னுதுரையோ அதே பள்ளியில் படிப்பை தொடர்ந்தார். 12ஆம் வகுப்பில் 93% மதிப்பெண்கள் பெற்றார். பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படிக்க விரும்பிய பொன்னுதுரைக்கு விண்ணப்பம் வாங்கக்கூட கையில் காசு இல்லை. தற்செயலாக, இவரது முன்னாள் ஆசிரியர் ஒருவர் மேசையைத் துடைத்துக் கொண்டிருந்த பொன்னுதுரையைப் பார்த்தார்.

மாணவருக்கு நல்வழி காட்ட விரும்பிய ஆசிரியர் பலரும் ஒன்று திரண்டனர். பொருளுதவி செய்து பொன்னுதுரையை சென்னைக்கு அனுப்பி வைத்தனர். இது மட்டுமா? பொன்னுதுரையின் அப்பாவிடம் கெஞ்சி கூத்தாடி போக்குவரத்துச் செலவுக்கு பணமும் வாங்கிக்கொடுத்து, வங்கிக்கு அழைத்துப்போய் கல்விக்கடன் பெறவும் உதவி செய்தார்கள்.

பொறியியல் கல்லூரியில் சேர்ந்த பொன்னுதுரைக்கு வேறு ஒரு பிரச்சினையும் தலை தூக்கியது. தமிழ் மீடியத்தில் படித்த தான், இங்கிலீஷ் மீடியத்தில் படிக்க முடியுமா? என்று பயந்தார். கருப்பு நிறமும், கரடு முரடான தோற்றமும் கொண்ட பொன்னுதுரைக்கு தாழ்வு மனப்பான்மை ஆட்டிப் படைத்தது. படிப்பை தொடர விரும்பாமல், கல்லூரியை விட்டு மூன்று முறை வெளியேறி விட்டார். இவரது முன்னால் ஆசிரியர்கள் சமாதானம் செய்து மீண்டும் கல்லூரிக்கு அனுப்பி வைத்தனர். இவ்வாறு மிகவும் கஷ்டப்பட்டு படிப்பை முடித்த பொன்னுதுரை, பிரபல சிமெண்ட் கம்பெனியின் நேர்முகத் தேர்விற்குச் சென்றார். அவர்கள் கொடுத்த சம்பளத்தை மனமார ஏற்றுக்கொண்டார். கெமிக்கல் இன்ஜினியரான இவர் I.T. துறைக்கு செல்ல விரும்பவில்லை. எதிர்காலத்தில் மேலும் என்ன செய்யப் போகிறீர்கள்? என்று கேட்டதற்கு அவர் சொன்னார்.

“நன்றாகப் படிக்கும் ஏழை எளிய மாணவர்கள் நமது கிராமங்களில் பலர் இருக்கிறார்கள். என்ன படிப்பது, எப்படி படிப்பது என்பது பற்றி அவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. அவர்களுக்கு நல்வழி காட்ட விரும்புகிறேன்.”

பொன்னுதுரைக்கு உதவி செய்து, நல்வழி படுத்திய அவரது ஆசிரியர்களின் பங்கு மகத்தானது. “ஆசிரியர் பணி அறப்பணி” என்பதை மெய்ப்பித்த ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

# 23. ஆசிரியரும் நம் மீது உரிமையுள்ளவரே

“இவள் என் பொண்ணு, இவன் என் பையன்” என்ற இந்த வார்த்தைகளுக்கு உரிமைக்காரர்கள். பெற்றவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களும் கூட சமுதாயத்தில் உயர்ந்து நிற்கும் பலரும் சுட்டிக் காட்டுவது பெற்றவர்களையும், தனக்கு தூண்டுகோலாக இருந்து முன்னேற்றப்பாதையை காட்டிய ஆசிரியர் களையும்தான்.

ஆண்டுதோறும் ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகளை சந்திப்பர். அதனால் அவர்கள் தன்னிடம் பயின்ற ஒவ்வொருவரின் முகத்தையும் நினைவில் வைத்திருக்க வாய்ப்பில்லை.

ஆனால் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தங்கள் ஆசிரியரின் நினைவு வந்துகொண்டேயிருக்கும்.

அப்போது அவர்கள் தங்கள் ஆசிரியரின் தியாகத்தை உணர்வர். ஒவ்வொரு குழந்தையும் தங்கள் ஆசிரியரின் நடவடிக்கையை பெற்றோரின் நடவடிக்கையோடு ஒப்பிட்டு பார்ப்பர். சில குழந்தைகள் தங்கள் ஆசிரியர் சொன்ன கருத்தை அன்றே பெற்றோரிடம் பகிர்ந்து கொள்வர். ஆசிரியர்கள் தங்களிடம் கோபப்படும்போது அந்த நேரத்தில் பயந்தாலும் அவர்களை கோபப்படுத்தும் படியான தங்களின் செயல்களுக்கு வருந்துகின்றனர்.

ஆசிரியரின் அன்பான வார்த்தையில் மாணவர்கள் தங்கள் தாயின் முகத்தைக் காண்கின்றனர்.

மாணவர்களிடையே சிலர் குறும்பு செய்கின்றவர்களாகவும், அடாவடி நடவடிக்கை உள்ளவர்களாகவும் இருந்தாலும் ஆசிரியர்கள் அந்த மாணவர்களிடம் தங்களின் கடமையை பொறுப்பாக செய்துவிட்டால் எதிர்காலத்தில் நல்ல நிலைமைக்கு வரும் போது அவர்கள் உங்களை நினைத்து உருகுவர்.

பத்தாவது, பனிரெண்டாவது பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு சில ஆசிரியர்கள் தங்களின் பள்ளி நேரத்தை விட கூடுதலாக இருந்து வழிநடத்துவர். அதுபோன்ற ஆசிரியர்களை மாணவர்கள் எக்காலத்திலும் மறக்க மாட்டார்கள் என்பது உறுதி.

ஆகவே, ஆசிரியர்களே, “இப்படிக் கஷ்டப்பட்டு சொல்லிக் கொடுத்து என்ன பயன்?” என்று எண்ணாமல் உங்கள் குழந்தைகளிடம் காட்டும் அன்பையும், பரிவையும் மாணவர்களிடமும் காட்டுங்கள்! பெற்றோரும் ஆசிரியர்களைப் பற்றி உயர்வான எண்ணங்களை தங்கள் பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டும்.

**- தினமலர் பெண்கள் மலர்**
24.04.2010

* * *

# 24. இதற்குத்தான் காத்திருந்தாயா வைபவி ?

பல்லாவரத்திலிருந்து குன்றத்தூர் போகும் சாலையில் இருக்கிறது திருமுடிவாக்கம். உயர உயர அபார்ட்மென்டுகள். ஆயிரக் கணக்கான வீடுகள். ஏரியா மொத்தமும் சொல்லிச் சொல்லி மாய்கிறது அந்தச் சம்பவம் பற்றி !

பிரைமரி ஸ்கூலில் மூன்றே மூன்று வருஷம் தனக்கு டீச்சராக இருந்த ராஜம்மா என்பவரை 10 வருஷங்களாக நினைத்திருந்த தோடு, உடல்நிலை சரியில்லாத நிலையிலும் குஜராத்தில் இருந்து வந்து அவரைப் பார்த்து அவர் தோளிலேயே மரித்திருக்கிறது ஓர் அழகிய ரோஜா!

வைபவி விஜயலக்ஷ்மி. இதுதான் அந்த மாணவியின் பெயர். கண்ணீருக்கும் கேவல்களுக்கும் இடையே கோரமான அந்த நிஜத்தைப் பகிர்ந்து கொள்கிறார் ஆசிரியை ராஜம்மாள்.

“இந்த இடம்தாங்க அந்தக் குழந்தை வந்து உட்கார்ந்திருந்தது… இதோ இந்தத் தோள்லதான் சாய்ஞ்சு படுத்திருந்துச்சு. அதோட விரல்களைப் பிடிச்சபடி நான் கன்னத்தைத் தட்டிகொடுத்துட்டு இருந்தேன்… அப்படியே என் தோள்ல சாய்ஞ்சபடியே உயிர் போயிடுச்சுங்க. இப்போவரை என்னால நம்ப முடியலை” எதுக்காக என் மேல அந்தக் குழந்தைக்கு அப்படியொரு பாசம். என்ன கொடுத்தேன் நான்? ஒரு டீச்சரா மூணு வருஷம் நான் அதுகிட்ட அன்பு காட்டினதைத் தவிர வேறு எதையும் பெரிசா செய்துடலை…ஆனா அந்தக் குழந்தை எனக்குக் கொடுத்துப் போயிருக்கிற மரியாதை, கௌரவம் எப்பேர்ப்பட்டது? உலகத்தில் யாருக்காவது இப்படி நடந்திருக்குமா? நடந்ததுனு சொன்னால்கூட நம்ப மாட்டோமே ! மனசை ஆற்ற முடியாமல் குழந்தையைப் போல அரற்றுகிறார் ராஜம்மாள்.

2007ம் வருஷம் நான் தாம்பரம் கேந்திரிய வித்யாலயா 2 ( ஏர்ஃபோர்ஸ் ஸ்டேஷன்) ஸ்கூல்ல பிரைமரி செக்ஷன்ல வேலை பார்த்துட்டிருந்தேன். அங்கே முதல் வகுப்புக்கு எடுக்கிற அதே ஆசிரியைதான் மூணாவது வகுப்புவரை. அதனால குழந்தைங்க நல்லா பழகி ஒட்டிக்குவாங்க. வைபவியும் அப்படித்தான்.

நார்மல் குழந்தைகளைவிட கொஞ்சம் பருமனா இருந்ததால், மத்த பசங்க அவளைக் கிண்டல் பண்ணுவாங்க. நான் அவகிட்ட பரிவா நடந்துக்குவேன். அதனால என்கிட்ட அந்த குழந்தைக்குக் கூடுதல் பிரியம். தன் லன்ச் பாக்ஸை பிரிச்சு, நான் ஒரு ஸ்பூன் எடுத்து சாப்பிட்டு நல்லாருக்குனு சொன்ன பிறகுதான் அது சாப்பிடும். என் புடவை நல்லாயிருந்தா முதல்ல ஓடி வந்து சொல்லும்! உன்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட் யார்னு கேட்டாகூட ராஜ்மா மேம்னு என் பேரைச் சொல்லும்.

வைபவியோட அப்பா ராம கிருஷ்ணராஜா ஏர்ஃபோர்ஸ்ல விங் கமாண்டர். அம்மா பிரியா ஹவுஸ் வொய்ஃப். கல்யாணமாகி 10 வருஷங்கள் குழந்தையில்லாம டில்லிக்குப் பக்கத்திலிருக்கிற, வைஷ்ணவி தேவி கோயில்ல பிரார்த்தனை செய்து முதல்ல பையன் வைஷ்ணவ் பிறந்திருக்கான். அடுத்துதான் வைபவி! அதனால வீட்டுல அந்த ரெண்டு குழந்தைகளும் அவங்களுக்கு ரொம்ப செல்லம்!

வைபவி தேர்டு ஸ்டாண்டர்டு முடிக்கிறப்போ, அவங்கப்பாவுக்கு அலகாபாத்துக்கு டிரான்ஸ்ஃபர் ஆச்சு. ‘போகவே மாட்டேன்‘னு அடம் பிடிச்சு நின்னுது வைபவி. ராஜ்மா மேமும் என்கூட வரணும்னு ஒரே அழுகை! நான் வர முடியாதுங்கிற

யதார்த்தத்தைப் புரிஞ்சுக்கத் தெரியாத வயசு!. எங்க அப்பா விங் கமாண்டர் தானே மேம்? பிரின்ஸிபால்கிட்ட சொல்லி பர்மிஷன் வாங்கி உங்களையும் அங்கே கூட்டிட்டுப் போயிடுவேன்னு அது சொன்னப்ப, அந்தப் பிஞ்சு இதயத்தின் பாசத்தில் வாயடைச்சுப் போயிட்டேன். அப்புறம் ஒரு வழியா, ஃப்ளைட்ல இப்போ டிக்கெட் இல்லையாம். நாளைக்கு ஃப்ளைட்ல மேடம் வருவாங்கன்னு சொல்லி அவளை சமாதானப் படுத்தி, அனுப்பி வச்சோம் !

அங்கே போயும் ரொம்ப நாட்களுக்கு 'என்ன இன்னும் மேம் வரலையே?'னு கேட்டுட்டே இருந்திருக்கா. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காரணம் சொல்லி சமாளிச்சிருக்காங்க. ஒரு கட்டத்துல அவளே புரிஞ்சுக்கிட்டா. அதுக்கப்புறம் போன்ல பேச ஆரம்பிச்சா!

வருஷா வருஷம் ஏப்ரல்ல அவ பிறந்த நாளுக்கு நான் வாழ்த்துச் சொல்வேன். என் பிறந்த நாளன்னிக்கு காலையில் வர்ற முதல் கால் அவளோடதாத்தான் இருக்கும். என்கிட்ட பேசும்போது எல்லாம் மறக்காம அவ கேட்கும் கேள்வி.. 'ஏன் மேம் எந்த டீச்சருமே உங்களை மாதிரி இருக்க மாட்டேங்கிறாங்க?' என்பதுதான். அவளோட அன்பை நினைச்சு எனக்குக் கண்ணீரே துளிர்க்கும். 'எல்லோரும் ஒரே மாதிரி இருக்க மாட்டாங்கம்மா' என்பதுபோல பதில் சொல்வேன். 'யூ ஆர் ஸோ லவிங்! ஸோ ஸ்வீட்! ஐ லவ் யூ ராஜ்மா மேம்! யூ ஆர் மை பெஸ்ட் ஃப்ரெண்ட்!' இதெல்லாம் வைபவி அடிக்கடி சொல்ற வார்த்தைகள். எதுன்னாலும் நான் சொன்னா கேட்டுக்குவா. வீட்ல அவ ஏதாவது மருந்து சாப்பிடலைன்னா கூட அவங்க பாட்டி, எனக்கு போன் பண்ணுவாங்க. நான் சொன்னதும் சமர்த்தா சாப்பிட்டுடும் குழந்தை! அந்த அளவுக்கு ஏதோ ஒரு அட்மிரேஷன், அட்டாச்மென்ட்!

இன்னொரு விஷயம் கேட்டு நான் ஆடிப் போய்ட்டேன்... டின்னருக்கு என்ன வேணும் னு பாட்டி கேட்டா, 'சப்பாத்தி வித் மை டீச்சர்'னு சொல்வாளாம். அவளுக்கு ராஜ்மா (பீன்ஸ்) ரொம்பப் பிடிக்கும். வீட்ல, அவளோட ரூம்ல நான் தேசிய நல்லாசிரியர் விருது வாங்கின போட்டோவை வச்சிருக்கிறதா அவங்க அம்மா சொல்வாங்க.

ஆச்சு...கால ஓட்டத்தில் இப்படியே பத்து வருஷங்கள் ஓடிடுச்சு. வைபவி பத்தாவது படிச்சிட்டிருந்தா. போன வருஷம் அக்டோபர்னு நினைக்கிறேன். நான் போன்ல பேசினப்போ, அவ குரலே சரியில்லை. ஏதோ மேல் மூச்சு வாங்குற மாதிரி பேசினா. 'குழந்தைக்கு ஏதோ உடம்புக்கு'னு தெரிஞ்சுது. வைபவியின் அப்பாகிட்ட பேசும்போது அவர் குரலும் சுரத்தில்லாம இருந்தது. என்னன்னு புரிஞ்சுக்க முடியல.

நவம்பர் மாசம் வெள்ளம் வந்தப்போ, நான் எப்படி இருக்கேன்னு கேக்கறதுக் காக பேசினாங்க.ரெண்டு தடவை வைபவி பேசினபோதும், ஆஸ்பத்திரியில் இருந்து தான் பேசியிருக்கானு பின்னாலதான் தெரிஞ்சுது! அவளுக்கு கிட்னியில் பிரச்னை. டயாலிசிஸ் பண்ணிட்டிருக் காங்க என்பது வரை தகவல் சொன்னாங்க.

மனசு வலிச்சுது! 'கடவுளே...ஏன் இந்தச் சின்னக் குழந்தையை இப்படி கஷ்டப்படுத்துற?'னு என் இஷ்ட தெய்வம் பெருமாள் கிட்ட வேண்டிக்கிட்டேன். அதுக்கு அடுத்த முறை பேசும்போது, 'எனக்குக் குழந்தையைப் பார்க்கனும் போலிருக்குனு சொல்லி, ஏர் டிக்கெட் எல்லாம் கூட ட்ரை பண்ணினேன். ஆனால், அவங்கப்பா பொங்கலுக்கு சென்னை வந்தாலும் வருவோம் மேடம். வைபவியும் உங்களைப் பார்க்கணும்னு தினமும் சொல்லிட்டே இருக்கு! என்றார். அதனால நான் கிளம்பல.

ஆனா, பொங்கலுக்கு வரல. அதுக்கப்புறம், இந்த பிப்ரவரி மாசம் 6-ம் தேதி திடீர்னு வைபவிகிட்டே இருந்து போன்! என்னோட

அட்ரஸைக் கேட்டா. எதுக்குனு கேட்டப்போ, அப்பா ஏதோ கொரியர் அனுப்பணும்னு சொன்னாங்கன்னு சொன்னாள். ஆனா, என்கிட்ட சொல்லாம சர்ப்ரைஸா என் முன்னால வந்து நிற்கணும்கிறது அவளோட திட்டமா இருந்திருக்கு.

7-ம் தேதி பார்த்தா, கார்ல வந்து இறங்குறாங்க. வைபவியும், அவ பேரன்ட்ஸும். அப்படியே அவளைக் கட்டிப் பிடிச்சி, உச்சி முகர்ந்தேன். டயாலிசிஸ் பண்ணின அடையாளமா கழுத்துல தழும்பு. துப்பட்டாவால அதை மறைச்சிருந்தா. முகம் லேசாக உப்பியது போல இருந்துச்சு. என்னைப் பார்த்த சந்தோஷத்தில் நோயைக்கூட மறந்துட்டு,முகத்தில் அவ்வளவு ஒரு மலர்ச்சியோட பேசிட்டிருந்தா... அவளோட டென்த் எக்ஸாம்ஸ் பத்தி சொன்னா. நான் நல்லா எழுதி உங்க ஸ்டூடன்ட்னு ப்ரூவ் பண்ணுவேன்னு சொன்னா.

எல்லோருக்கும் டீ போட்டேன். வைபவிக்கும் கொடுத்தேன். அரை டம்ளர் குடிச்சது குழந்தை. கொஞ்ச நேரம் படுத்தது. அப்புறம், படுத்திருக்க முடியலைனு எழுந்து உட்கார்ந்தது. என்னோட கட்டில்ல, காலைக் கீழே தொங்கப் போட்டுக்கிட்டு அவள் நடுவிலேயும் நானும் அவளோட அம்மாவும் ரெண்டு பக்கத்துலேயும் உக்கார்ந்திருந்தோம். அவளுக்கு முன்னாடி அழக்கூடாதுனு அவ பெற்றோர் ஒரு சொட்டு கண்ணீர்கூட விடாமல், பல்லைக் கடிச்சிக்கிட்டு சிரிச்சபடி இருந்தாங்க. அது மனசை ரொம்ப சங்கடப்படுத்திச்சு.

‘எனக்கு ஞாபகம் இருக்கு மேம்...தாம்பரம் ஸ்கூல் டே ஃபங்க்ஷன்ல பிங்க் டிரெஸ் போட்டு என்னை ஆட வச்சீங்க!னு சொல்லி சிரிச்சா. ஐ மிஸ் யூ மேம் னு கட்டிக்கிட்டா.

பேசிட்டு இருக்கும்போதே ‘டயர்டா இருக்கு மேம் னு சொல்லிக்கிட்டே என் தோள்ல சாஞ்சுக்கிட்டா! லேசா மூச்சுத் திணறல் இருந்ததுபோல...மூச்சு விட்டா! தண்ணி கேட்டா...கொடுத்ததும் வாங்கி ஒரு மடக்கு குடிச்சா! என் வலது கையால் அவளோட தோள்களை அணைச்சதுபோல பிடிச்சிருந்தேன். இன்னொரு கையால் கன்னத்தில் தட்டிக் கொடுத்துட்டு இருந்தேன். பேச்சே இல்லை! அவங்க அம்மா, பேபி, பேபி னு கூப்பிட்டுப் பார்த்தாங்க.

நானும் பதற்றமாகி வைபவி...பாப்பானு கன்னத்தைத் தட்டிப் பார்த்தேன். எனக்கு உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை என்னவோ ஓடின மாதிரி உணர்வு! அப்படியே படுக்க வச்சோம்! மூக்கில் லேசா ஒரு திரவம் வடிஞ்சிருந்தது. நாக்கின் நுனி லேசா வெளியில் தள்ளியபடி இருக்க, உடலில் எந்த அசைவும் இல்லை. எனக்குள்ள சிலீர்னு என்னமோ பண்ணுச்சு! விபரீதம்னு மூளையில் உறைச்சது.

அடிச்சுப் பிடிச்சு கீழிறங்கி ஓடி, ஒரு டாக்டரைக் கூட்டிட்டு வந்தேன். டாக்டர் வந்து செயற்கை முறை சுவாசத்துக்கு முயற்சி செய்து பார்த்தாங்க. கடைசியில், நாடியைப் பிடிச்சிப் பார்த்துட்டு, உதட்டைப் பிதுக்கினாங்க!

ஐயோ...கடவுளே! னு நான் கதறின அந்த நிமிஷத்திலிருந்து அதுக்கப்புறம் நடந்தது எல்லாம் ஏதோ கனவு போலத்தான் இருக்கு!

ஆம்புலன்ஸ் வந்தது. வேறொரு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் பார்த்தாங்க. வைபவி உயிரோடு இல்லைங்கற கொடுமையான நிஜத்தை அவங்களும் உறுதிப்படுத்தினாங்க. அங்கேயிருந்து வைபவியை, கொரட்டூர்ல இருக்குற அவங்க பெரியப்பா வீட்டுக்குக் கொண்டு போனோம். ஒரு ஜடம் மாதிரி நான் அந்தக் குழந்தையின் முகத்தையே பார்த்தப்படி இருக்க, வந்தவங்க எல்லாம், ‘யார் அந்த மேடம்?’னும் இவங்கதான் அந்த டீச்சரா?னும் என்னைப் பார்த்துட்டுப் போனாங்க. இவங்களைப் பார்க்கத்தான் அங்கேயிருந்து வந்துச்சாம்... இந்த மேடம்னா உசுராம்னு எல்லாரும் சொல்லச் சொல்ல எனக்கு கட்டுப் படுத்த முடியாமல் அழுகை!

அடுத்த நாள் ஃப்ளைட்ல வந்திறங்கிய பாட்டியும், வைபவியின் அண்ணாவும் கதறிய கதறல்... ராஜ்மா மேடத்தைப் பார்த்துட்டு வந்துடறேன் பாட்டினு சொன்னியே கண்ணு! எங்கேடா போன? இதோ பாரு உன்னாட ராஜ்மா...எழுந்து வாடா! னு அந்த அம்மா ஓலமிட்டது இன்னும் என் காதுகளை விட்டுப் போகலை! அந்த நிகழ்வை அப்படியே கண்களில் காட்டிக் கலங்குகிறார் ராஜம்மாள்.

"என்ன பந்தம் இது? எந்த ஜென்மத்து பந்தம்? விட்ட குறை தொட்ட குறையாக பூர்வ ஜென்மத்தில் விட்டுப் போனதை நிறைவு செய்ய வந்த தேவதை....இனி என்னோடு எப்போதும் இருந்து என்னை வழி நடத்தப் போகும் என் குட்டி தேவதை ! அந்தக் குழந்தையை இழந்து தவிக்கிற பெற்றோருக்கும், அண்ணனுக்கும், பாட்டிக்கும் இந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு வரும் தைரியத்தைக் கடவுள் தரணும் !" என்கிறவருக்கு வைபவி தினமும் கனவில் வருகிறாளாம்.

வைபவி....என் செல்லமே! உனக்கு அன்பைத் தவிர வேற எதையுமே நான் கொடுக்கலையே! ஆனா...நீ எனக்குக் கொடுத்திருக்கிறது மிகப் பெரிய கௌரவம். நான் வாங்கின நல்லாசிரியர் விருதெல்லாம், நீ கொடுத்திருக்கும் இந்த விருதுக்கு முன்னால் எம்மாத்திரம்? இந்தக் கடனை நான் எப்படிக் கழிப்பேன்? மீண்டும் பிறந்து வா கண்ணே! உனக்கு வகுப்பெடுக்கக் காத்திருக்கேன் இந்த ராஜ்மா! எனத் தான் எழுதி வைத்திருக்கும் வரிகளை நமக்குக் காட்டுகிறார் ராஜம்மாள்.

நம் விழிகளின் நீர்த்திரையால் கலைந்து தெரிகின்றன எழுத்துக்கள்!

*இந்த நேசம் வந்தது எப்படி ?*

இத்தனை பாசத்தையும் நேசத்தையும் ராஜம்மாள் ஈட்டியது எப்படி? அவர் குழந்தைகளிடம் காட்டுவது அப்படி என்ன ஸ்பெஷல் ட்ரீட்மென்ட்?

குழந்தைகளின் அன்பு மட்டுமே என்னுடைய பெரிய சொத்து! பொதுவாக ஆசிரியர் – மாணவி உறவு, அந்தப் பள்ளியை விட்டுப் போகும் வரைதான் இருக்கும். பெற்றோரும் அப்படித்தான். நம்ம குழந்தையை நல்லா பார்த்துக்கணுமே என்று ஒரு பள்ளியில் படிக்கும் வரைதான் ஆசிரியர்களிடம் நன்றாகப் பழகுவார்கள். ஆனால், என் விஷயத்தில் யாரும் அப்படியல்ல. நான் போடும் ஒரு கமென்ட்டையோ, ஸ்டாரையோகூட குழந்தைகள் இன்னும் பத்திரமாக வைத்திருக்கிறார்கள். காரணம், 'யூ ஆர் டீச்சர்ஸ் பிரைடு' என்பது போன்ற இணக்கமான கமென்ட்டுகளை எழுதுவேன். அதனால் எந்தக் குழந்தையுமே என்னை விட்டு விலகினதில்லை. எந்தக் குழந்தை யையும், 'நீ அன்ஃபிட், முட்டாள், லாயக் கில்லாதவன்' என்றெல்லாம் நான் ஒதுக்கியதில்லை.

ஆங்கிலத்தில் ஒரு சொற்றொடர் உண்டு.

Every child is a master piece!

Every child is the Master's piece! இது என்னுடைய ஃபேவரைட் கோட்!

நன்கு படித்து, நல்ல மதிப்பெண் வாங்கும் மாணவர்களையே பாராட்ட வேண்டும் என்பதில்லை. நன்கு படிக்காத மற்ற குழந்தைகளையும் பாராட்ட வேண்டும். அவர்களுக்குள் என்ன திறமை இருக்கும் என்பது நமக்கு இப்போது தெரியாது. நம் பாராட்டுகளே அதைக் கண்டுபிடிக்க உதவும்! என்கிறார் இந்த நல்லாசிரியர்.

*குழந்தைகள் வளர்ப்பில் பெற்றோர்களை விட ஒரு நல்ல ஆசிரியரின் பங்கு மிக மகத்தானது.*

**"ஆசிரியர் பணி ஒரு அறப்பணி"**

நன்றி : மல்லிகை மகள் – *Prema Narayanan*

* * *

# 25. அந்த ஆசிரியர் செய்த அற்புதம்

அமெரிக்கா, நியூயார்க்கில் ஒரு பள்ளி ஆசிரியை தன் மாணவர்கள் தனக்கு எவ்வளவு முக்கியம் என்பதை அவர்களிடமே தெரிவிக்க விரும்பினார்.

அவர்கள் ஒவ்வொருவரிடமும் அவன் தனக்கு எவ்வளவு முக்கியமானவன், அவனது நன்னடத்தையினால் அந்த வகுப்பே எவ்வளவு சிறந்து விளங்குகிறது என்பதை விளக்கினார்.

பிறகு அவர்களிடம், "நான் பிறரிடம் நடந்து கொள்ளும் முறைதான் என்னை ஒரு வித்தியாசமான மனிதனாகக் காட்டுகிறது" என்று எழுதப்பட்ட நீல ரிப்பனை அணிவித்தார்.

ஒவ்வொருவரிடமும் அது போன்ற மூன்று ரிப்பன்களைத் தந்து, "நீங்களும் உங்களுக்கு வேண்டியவர்களுக்கு இந்த ரிப்பனை அணிவித்து, அவர்கள் உங்களுக்கு எவ்வளவு பிரியமானவர்கள் என்பதை விளக்குங்கள்" என்றார்.

ஒருவன் தனது தந்தைக்கு அந்த ரிப்பனை அணிவித்தான். அவரது மேலதிகாரி எப்போதும சிடுசிடுவென்று இருப்பார்.

தனது மகன் அளித்திருந்த நீல ரிப்பனை அவர் அந்த மேலதிகாரியிடம் அளித்து, "சார்! நீங்கள் நன்கு யோசித்துப் புது விதமாகப் பணிகளைச் செய்கிறீர்கள். அதனால் நம் நிறுவனம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது" என்றார்.

அந்த அதிகாரி தனது ஊழியரின் புகழ்ச்சியால் மகிழ்ந்தார். அந்தச் சீரிய வாசகங்கள் அடங்கிய நீல ரிப்பன் அவரது நெஞ்சை அலங்கரித்தது.

அன்று மாலை அவர் வீடு திரும்பியதும், தனது 14 வயது மகனிடம், "மகனே! இன்றைக்கு என் நண்பர் ஒருவர் என்னிடம் என்னையும் என் அலுவலக பணியையும் புகழ்ந்து விட்டு, இந்த ரிப்பனை எனக்கு அணிவித்தார். பார்!அந்த ரிப்பனில் என்ன எழுதியிருக்கிறது என்று ".

"மகனே, அத்துடன் என்னிடம் மற்றொரு ரிப்பனையம் தந்து, எனக்குப் பிரியமான ஒருவருக்கு அதைத் தரச் சொன்னார். உடனே எனக்கு உன் நினைவு வந்தது" என்றார்.

மேலும், அவர் "மகனே! எனக்கு அலுவலகத்தில் மிக அதிகமான வேலை. அவற்றை முடித்துவிட்டு நான் வீட்டுக்கு வரும்போது மனதாலும், உடலாலும் மிகவும் களைத்து விடுகிறேன். அதனால், உன்னிடம் என்னால் பிரியமாகப் பேசவே முடிவதில்லை. நீ உனது மதிப்பெண்களைப் பற்றிக் கூறும் போது உன்னைக் கோபிப்பேன். உன் அறையை நீ ஒழுங்காக வைக்காவிடில் உன்னிடம் எரிந்து விழுகிறேன்."

"ஆனால், இன்று இந்த ரிப்பனிலுள்ள வாசகங்கள் என் கண்களைத் திறந்துவிட்டன. நீ எனது அன்பு மகன். உன்னிடம் நான் இன்னும் நல்லபடியாக நடந்து கொள்ள வேண்டும் என்று உணர்ந்தேன். ஏனெனில் நான் உண்மையிலேயே உன்னை நேசிக்கிறேன்" என்றார் கண்கலங்கி. தந்தையின் அன்பால் மகனும் கலங்கி உணர்ச்சியுடன் கூறினான்.

"அப்பா! நீங்கள் என்னிடம் பிரியமில்லாமல் நடந்து கொள்வதால் வருந்திய நான், ஒரு முடிவிற்கு வந்தேன். அன்பற்ற தந்தை! இனியும் இம்மாதிரி வசவுகளைப் பொறுக்க முடியாது என்று நான் தற்கொலை செய்து கொள்ள எண்ணினேன்."

"அப்பா, இன்று என்னிடம் உங்களுக்குள்ள அன்பைக் கண்டுக்கொண்டேன். இனி, நீங்கள் மட்டுமல்லாமல், என்னிடம் பழுகுபவர்கள் அனைவரும் என்னிடம் பிரியமுடன் நடந்துகொள்ளும்படி எனது செயல்களைக் கவனமாகச் செய்வேன்."

அந்த ஆசிரியை தனது மாணவர்களின் குறைகளையெல்லாம் பொருட்படுத்தாது, அவர்களின் முன்னேற்றம் ஒன்றையே கருத்தில் கொண்டு செய்த ஒரு சிறு செயல், தொடர் சங்கிலியாக ஒவ்வொருவரின் வாழ்விலும் பல நன்மைகளை வழங்கியது.

# 26. ஆசிரியரின் விளையாட்டும் மாணவரின் விளையாட்டும்

அந்தப் பேராசிரியரின் அறிவுரைகள் எப்போதுமே மாணவர்களைக் கவர்ந்தன. அன்று மாணவன் ஒருவன் அவரது தினசரி நடைப் பயிற்சியின் போது உடன் சென்றான்.

வழியில் ஒரு வரப்பின் மீது நைந்து போன நிலையில் ஒரு கோட்டும், ஒரு ஜோடி பழைய காலணிகளும் இருந்ததைக் கண்டான்.

மாணவன் பேராசிரியரிடம், சார்! இவை வயலில் வேலை செய்யும் ஓர் ஏழை முதியவருடையது என்று நினைக்கிறேன். விளையாட்டுக்காக இந்தக் காலணிகளை இப்புதரினுள் ஒளித்து வைத்து நாம் ஒளிந்திருந்து பார்ப்போமா? என்றான்.

பேராசிரியர், தம்பி! நாம் எப்போதும் ஏழைகளின் துன்பத்தில் மகிழ்ச்சி அடையக் கூடாது. ஆனால் உனக்கு அந்த ஏழையிடம் விளையாட வேண்டும் என ஆவல் பிறந்து விட்டது. ஒன்று செய்வோமா? நீயோ பணக்காரன். அந்தக் காலணி இரண்டிலும் மதிப்புள்ள ஒரு நாணயத்தை வைத்துவிட்டு உடனே வா! அவர் திரும்பி வரும் நேரமாகி விட்டது. நாம் புதர் மறைவிலிருந்து என்ன நடக்கிறதென்று கவனிப்போம்! என்றார்.

அப்படியே செய்து இருவரும் புதருக்குள் ஒளிந்து கொண்டனர்.

வேலைகளை முடித்துக்கொண்டு திரும்பி அந்த ஏழை முதியவர் தன் கோட்டை அணிந்து கொண்டார். பின்பு காலணிக்குள் ஒரு காலை நுழைத்தவுடன் ஏதோ ஒன்று இடறியதால் குனிந்து பார்த்து, அது ஒரு மதிப்புள்ள நாணயம் என்பதைக் கண்டார்.

அதை எடுத்துக்கொண்டு ஆச்சரியத்துடன் திருப்பித் திருப்பிப் பார்த்தார். சுற்று முற்றும் திரும்பிப் பார்த்து எவரும் அருகில் இல்லை என்று தெரிந்த பின்பு அதனை கோட்டினுள் போட்டுக் கொண்டார்.

பிறகு வேகமாக மற்றொரு காலையும் காலணியல் நுழைத்தபோது மற்றொரு நாணயம் இருந்ததைக் கண்டு அதையும் எடுத்துக் கொண்டார்.

அவரது மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. அக்கணமே அவர் மண்டியிட்டவாறு கை தொழுது கடவுளுடன் உரக்கப் பேசத் தொடங்கினார்.

இறைவனே! என் பிரார்த்தனைக்குச் செவிமடுத்ததற்கு மிக்க நன்றி. எனது இந்த முதிய வயதில், நோய்வாய்ப்பட்ட நிலையில் உதவியின்றித் தவிக்கும் என் மனைவி மற்றும் உணவுக்கு ரொட்டி கூடக் கிடைக்காது அல்லலுறும் என் குழந்தைகளையும் காக்க வேண்டியது என் கடமை.

தங்களருளால் முன் பின் தெரியாத யாரோ ஒரு நல்லவர் மூலம் இன்று இந்த நாணயங்கள் வரப்பிரசாதமாக வந்துள்ளன. இவற்றைக் கொண்டே என் குடும்பத்தை வறுமையிலிருந்து காப்பாற்றி விடுவேன் என்று கூறி கடவுளுக்கு நன்றி செலுத்தினார்.

புதருக்குள்ளிருந்த பேராசிரியர் தன் மாணவனைப் பார்த்தபோது அவன் வாயடைத்துப் போய் நின்று கொண்டிருந்தான்.

பேராசிரியர் அவனைக் கட்டியணைத்து, “நீ முதலில் நினைத்திருந்த விளையாட்டை விட, இந்த விளையாட்டு அதிக மகிழ்ச்சி தந்தது என்பதை உணருகிறாயா, தம்பி?” என்று கேட்டார்.

அம்மாணவர், ஆமா சார்! நான் என்றுமே மறக்க முடியாத வகையில் ஒன்றை இன்று எனக்குக் கற்றுக்கொடுத்துள்ளீர்கள். சிறு வயதில் பெற்றுக் கொள்வதைவிட கொடுப்பதே அதிக மகிழ்ச்சி தருவது என்று படித்தது அன்று புரியவில்லை. இன்று இந்த வாசகங்களை நிசர்சனமாக உணர்கிறேன். நன்றி சார். என்றான் கண்ணீருடன்.

**- எம். பைரவா சுப்ரமணியம்**

## 27. Difference between a Teacher and Guru

| | Teacher | Guru |
|---|---|---|
| 1. | A teacher takes responsibility for your growth. | A guru makes you responsible for your growth. |
| 2. | A teacher gives you things you do not have and require | A Guru takes away things you have and do not require. |
| 3. | A teacher answers your questions. | A Guru questions your answers. |
| 4. | A teacher requires obedience and discipline from the pupil. | A Guru requires trust and humility from the pupil. |
| 5. | A teacher clothes you and prepares you for the outer journey. | A Guru strips you naked and prepares you for the inner journey. |
| 6. | A teacher is a guide on the path. | A Guru is a pointer to the way. |
| 7. | A teacher sends you on the road to success. | A Guru sends you on the road to freedom. |
| 8. | A teacher explains the world and its nature to you. | A Guru explains yourself and your nature to you. |
| 9. | A teacher gives you knowledge and boosts your ego. | A Guru takes away your knowledge and punctures your ego. |
| 10. | A teacher instructs you. | A Guru constructs you. |

| | Teacher | Guru |
|---|---|---|
| 11. | A teacher sharpens your mind. | A Guru opens your mind. |
| 12. | A teacher reaches your mind. | A Guru touches your spirit. |
| 13. | A teacher instructs you on how to solve problems. | A Guru shows you how to resolve issues. |
| 14. | A teacher is a systematic thinker. | A Guru is a lateral thinker. |
| 15. | One can always find a teacher. | But a Guru has to find and accept you. |
| 16. | A teacher leads you by the hand. | A Guru leads you by example. |
| 17. | When a teacher finishes with you, you celebrate. | When a Guru finishes with you, life celebrates. |

Let us honour both, the teacher and the Guru in our lives...

Provided by
**- Ragothaman. N**

* * *

# 28. ஒரு வார்த்தை

அது ஒரு வகுப்பறை.

மாணவர்களைப் பார்த்து ஆசிரியர் ஒரு கேள்வி கேட்டார்.

"நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்!"

ஒவ்வொருவராக எழுந்து பதில் சொல்ல ஆரம்பித்தனர்.

"நான் டாக்டராவேன்."

"எனக்கு சயின்டிஸ்ட் ஆகணும்னு ஆசை."
"நான் ஐ.ஏ.எஸ். படிச்சு கலெக்டாரவேன்."
"பைலட்டாகிப் பறப்பேன்."
"கேட்டரிங் படிச்சிட்டு பிஸினஸ் பண்ணப் போறேன்."

ஒவ்வொருவரின் பதிலையும் மற்ற மாணவர்கள் ஆர்வத்துடன் ரசித்துக் கொண்டிருந்தனர். ஊசி விழுந்தாலும் துல்லியமாகக் கேட்குமளவுக்கு வகுப்பறையில் பெருத்த அமைதி. அப்போதுதான் அந்த மாணவன் எழுந்தான்.

"பெரிய பணக்காரனாவதுதான் என் லட்சியம்." அதைக் கேட்டதும் வகுப்பறையில் 'ஹோ'வென்ற சிரிப்பலை. ஆசிரியருக்கும் சிரிப்பை கட்டுப்படுத்த முடியவில்லை. வகுப்பை கைகளால் அமைதிப்படுத்திய படியே..

"பணக்காரனாகி என்ன செய்வே!" என்றார்.

"எனக்குப் பிடிச்சதெல்லாம் வாங்குவேன். செல்ஃபோன், ஹோம் தியேட்டர், பெரிய பங்களா, கார்...."

"அப்புறம்?"

"வெளிநாடுகளை சுத்திப் பார்ப்பேன்..."

"அப்புறம்...."

"பிஸினஸ் தொடங்கி இன்னும் நிறையப் பணம் பண்ணுவேன்...."

"இன்னும் பணமா? அத்தனை பணத்தை வெச்சுட்டு என்ன செய்வே...?

"பெரிய நிறுவனத்தை ஆரம்பிச்சு, உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை கொடுப்பேன். ஹாஸ்பிடல் கட்டி, ஏழைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிப்பேன். பள்ளிக்கூடம் நிறுவி ஏழைக் குழந்தைகளுக்கு படிப்பறிவு புகட்டுவேன்."

வகுப்பறையில் பலத்த கரகோஷம் எழுந்தது. ஒரு நிமிடத்திற்கு முன்பு கேலியாகச் சிரித்தவர்கள், அடுத்த நிமிடமே மகிழ்ச்சியுடன் பாராட்டி கைதட்டியதன் காரணம் என்ன?

நேர்மையான வழியில் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு சமுதாயத்துக்கு நல்லது செய்வதாக இருந்தால், பணக்காரனாக வேண்டும் என்று லட்சியம் கொள்வதம், அதற்காக ஆசைப்படுவதும் தவறொன்றும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டதுதானே!

**– அனுஷா நடராஜன்**

* * *

## 29. SRK, an outstanding teacher

It was October 31, 1974. A farewell gathering was arranged on the premises of the Railway Mixed High School, Golden Rock Thiruchirappalli, in Honour of teacher Sivaramakrishnan on his retirement.

Felicitations, mainly by students, were over. Principal Vaidyanathan and Correspondent Madappa showered encomiums on him. In his short response, SRK ( as he was known ) thanked one and all, and said he was happy as he had finished his race in Obeisance to God and true to his conscience.

The ceremony over, the dignitaries walked the teacher down the platform and led him to the Principal's chamber. All of a sudden, SRK bent down and prostrated, kissed the red soil and smeared the dust on his body. We were stunned.

He calmly rose up. "Don't be shocked. I am all right. The soil and dust which my students walked upon are to me as holy as anything else. This school and the administration helped me and my family sustained all these 30 years. This gesture is an expression of my love and gratitude to them. Nothing more," he said, His eyes moistened. So did ours.

An educationist once classified teachers into four categories;

A poor teacher tells; a good teacher teaches : an excellent teacher demonstrates: and an outstanding teacher motivates.

This writer, a junior colleague of SRK those days, observed him as an outstanding teacher, since he was very good at teaching English and mathematics.

The dedicated teacher is no more. But his service to the cause of education remains green in my memory even after many decades.

**A Teacher is GREAT,**
**ALWAYS GREAT**

*- Solomon Dhanraj*

❋ ❋ ❋

## 30. REMEMBER THAT TEACHER ?

*THE ONE YOU HAVEN'T MET SINCE YOU LEFT SCHOOL*
*A FAIR FEW YEARS AGO.*
*WHEN YOU HAD BABY FAT*
*AND LOOKED NOTHING LIKE YOU LOOK TODAY.*
*ANYBODY WHO HASN'T SEEN YOU SINCE SCHOOL,*
*SHOULDN'T RECOGNISE YOU.*
*EXCEPT, THE TEACHER WILL.*
*RECOGNISE NOT JUST YOU, BUT EVERYONE ELSE*
*FROM YOUR BATCH.*
*THAT ALONE, IS GOOD ENOUGH A REASON TO GO BACK*
*AND SAY THANKS.*

*Courtasy : Times of India*

**TEACHER'S DAY : SEPTEMBER 5**